21 OCT 1947 MADRAS

ஸ்ரீ:

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 6 | ஸர்வஜித் ௵ ஐப்பசி ௴ | ஸஞ்சிகை 10

"𑌅𑌹𑍋𑌬𑌿𑌲𑍇 𑌗𑌾𑌰𑍁𑌡𑌶𑍈𑌲𑌮𑌧𑍍𑌯𑍇
𑌕𑍃𑌪𑌾𑌵𑌶𑌾𑌤𑍍 𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌾𑌨𑌮𑍍 ।
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾 𑌸𑌮𑌾𑌲𑌿𑌙𑍍𑌗𑌿𑌤𑌵𑌾𑌮𑌭𑌾𑌗𑌂
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥"

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌾𑌰𑍁𑌣𑍍𑌯𑍋𑌤𑍍𑌥𑌿𑌤𑌾 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑍇𑌣 𑌜𑍀𑌯𑌾𑌦𑌾𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌤𑌾𑌰𑌕𑌮𑍍 ॥
𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌗𑍇𑌹𑍇 𑌗𑍇𑌹𑍇 𑌸𑌦𑌾 𑌵𑌸𑍇𑌤𑍍 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌹𑍍𑌯𑍇𑌷𑌾 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌯𑌾 𑌸𑌹 ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

::o::

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமதே ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்யபாதுகா ஸேவக

ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ ஸ்ரீரங்கசடகோப யதீந்த்ர மஹாதேசிகாய நம:

கோ மாஹாத்ம்யம்

[ஸ்ரீ அஹோபில மடம் ஸ்ரீ அழகிய சிங்கரால் உபந்யாஸமாக அநுக்ரஹிக்கப்பட்டு ஸ்ரீ கார்யம் தையாறு ஜோஸ்யம் ஸ்ரீ. உப. ரங்காசார்ய ஸ்வாமியால் வெளியிடப்பட்டது]

'யஸ்ய ப்ரஸாதாத் ஸர்வ பூதாநி அத்ரைவ ' என்று பகவானிடத்தில் சதுர்த்தஸ புவநங்களும் இருக்கின்றனவென்று சொல்லியிருப்பது போல் 'கவாமங்கேஷு திஷ்டந்தி ஸர்வ பூதாநி அத்ரைவ ' என்று கோக்களின் அங்கங்களிலும் சதுர்த்தஸ புவநங்கள் இருக்கின்றனவென்று ஸாஸ்த்ரம் சொல்லுகிறது. கோவானது இப்படி ஸர்வ லோகத்திற்கும் ஆதாரமாயிருப்பதினாலேயே, ஸர்வ லோகத்திற்கும் ஆதார பூதையான பூமியானவள் கோ ரூபத்தைத் தரித்தாளென்று ['ஸூமி........கௌர்பூத்வா' என்று] ஸ்ரீ பாகவதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. தவிர : தர்ம தேவதையும் கோ ரூபையாக இருக்கிறதென்பது,

'வ்ருஷரூபேண யஸ்ய பதாநி சத்வாரி'

இத்யாதி ப்ரமாணங்களால் ப்ரஸித்தம். ப்ருது சக்ரவர்த்தி காலத்தில் ப்ருதிவியை கோவாகவும், ஹிமவத் பர்வதத்தைக் கன்றாகவும், ஓஷதி ரஸங்களை க்ஷீரங்களாகவும் கல்பித்தார்களென்பது புராண ப்ரஸித்தம்.

இது இவ்வளவு உத்க்ருஷ்ட வஸ்துவாகையாலே கோ தாநத்தை ஸர்வ கர்மங்களிலும் ப்ராயஸ: ஸிஷ்டர்கள் அநுஷ்டித்து வருகிறார்கள். இந்த கோ தாநம் 'ப்ராஜாபத்யே த்ரு ராமேகாம்' இத்யாதிகளில் க்ருச்ர சாந்த்ராயண ப்ரத்யாம்நாயமாக விதிக்கப்பட்டிருக்கிறது. இதிஹாஸ புராணங்களில், யஜ்ஞங்களிலும், புத்ர ஜந்ம விவாஹங்களிலும் இந்த கோதாநமே ப்ரஸஸ்தமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. சிறைச்சாலையில் இருந்த வஸுதேவரும் ஸ்ரீ க்ருஷ்ண ஜநந காலத்தில் 'அயுத த்விஜேப்யோ ப்ரயச்சாமி ஸ்வலங்க்ருதா கவாம்' என்று மாநஸிக ஸ்நாநம் செய்து பதினாயிரம் பசுக்களைத் தாநம் செய்தாரென்று ஸ்ரீ பாகவதம் சொல்லுகிறது.

"கோப்ராஹ்மணேப்ய: ஸுபமஸ்து நித்யம்
லோகாஸ்ஸமஸ்தாஸ்ஸுகினோ பவந்து"

என்று முதலில் கோவுக்கும், பிறகு ப்ராம்ஹணனுக்கும், பிறகு லோகத்துக்கும் ஸுகத்தைக் கோருகிறார்கள்.

முதலில் வேதம் ...ஷேசவா' என்று ஆரம்பித்து, கோ வத்ஸம் முதலான வற்றின் ப்ரஸ்தாவத்தினாலேயே சொல்லுகிறது. அச்சித்ரத்தில் பல விடங்களில்

தமிழ் ... நூலகம்

'[illegible] 𑌸𑍈𑌵 𑌤𑌤𑌃 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌿𑌃'

என்று கோ க்ஷீர ஹோமமே ஆங்காங்கு ப்ராயச்சித்தமாக விதிக்கப்பட்டிருக்கிறது. கோ தந மில்லாதவன் அக்நிஹோத்ராதிகளைச் செய்ய ஸமர்த்த னல்லன்.

இதன் மாஹாத்ம்யம் இப்படியிருக்க, இது லோகத்துக்குச் செய்யும் உபகார விசேஷத்தை ஸ்வல்பம் சொல்லுகிறோம். கோவானது வத்ஸமாக ஜனித்த மாத்ரத்தாலேயே அதன் தாய் க்ஷீரத்திற்கு ப்ரயோஜந மாகிறது. இந்த வத்ஸத்தின் அபிவ்ருத்திக்காகவன்றோ அதற்கு ஶக்தி உண்டாகும்வரையில் க்ஷீரம் பெருகுகிறது. இதை, '𑌵𑌤𑍍𑌸𑌵𑌿𑌵𑍃𑌦𑍍𑌧𑌿𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌂 𑌕𑍍𑌷𑍀𑌰𑌸𑍍𑌯 𑌯𑌥𑌾 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑌜𑍍𑌞𑌸𑍍𑌯' என்று ஸாங்க்யன் சொன்னான். இவ்வத்ஸம் பெரிதான பிறகு வ்ருஷப ஸம்பந்தத்தால் பல வ்ருஷபங்களை உண்டாக்கி க்ருஷ்யாதிகளுக்கு உபகரித்தும், கோவாதிகளை (பசுக்களை) உண்டாக்கி, அவற்றால் க்ஷீர தயி நவநீத க்ருதாதிகளைக் கொடுத்தும் லோகத்தாருக்கு உபகரிக்கிறது. கோவில்களில் அர்ச்சாரூபியான பகவான்கள் யாவரும் திருப்பள்ளியெழுச்சி யானவுடனே விச்வரூபத்தில் கோக்களையே பார்க்க விரும்புகிறார்கள். '𑌗𑌾𑌵𑍋 𑌜𑍍𑌯𑍇𑌷𑍍𑌠𑌾𑌸𑍍𑌤𑍁 𑌪𑍃𑌷𑍍𑌠𑌤𑌃' என்றன்றோ கோக்களின் மாஹாத்ம்யம் இருப்பது? அந்த: சுத்திக்கும் பாஹ்ய சுத்திக்கும் பஞ்சகவ்யம் ஸ்ம்ருதிகளில் சொல்லப்பட்டிருப்பது ஸுப்ரஸித்தம்.

ஸ்ரீ வால்மீகி ராமாயணத்தில் வஸிஷ்ட விச்வாமித்ர ஸம்வாதத்தில், வஸிஷ்டரால்,

"𑌏𑌤𑌦𑍇𑌵 𑌹𑌿 𑌮𑍇 𑌰𑌤𑍍𑌨𑌮𑍇𑌤𑌦𑍇𑌵 𑌹𑌿 𑌮𑍇 𑌧𑌨𑌮𑍍 ।
𑌏𑌤𑌦𑍇𑌵 𑌹𑌿 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌵𑌮𑍇𑌤𑌦𑍇𑌵 𑌹𑌿 𑌜𑍀𑌵𑌿𑌤𑌮𑍍 ॥
𑌦𑌰𑍍𑌶𑌶𑍍𑌚 𑌪𑍌𑌰𑍍𑌣𑌮𑌾𑌸𑌶𑍍𑌚 𑌯𑌜𑍍𑌞𑌾𑌶𑍍𑌚𑍈𑌵𑌾𑌪𑍍𑌤𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌃 ।
𑌏𑌤𑌦𑍇𑌵 𑌹𑌿 𑌮𑍇 𑌰𑌾𑌜𑌨𑍍 𑌵𑌿𑌵𑌿𑌧𑌾𑌶𑍍𑌚 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌸𑍍𑌤𑌥𑌾 ॥
𑌅𑌤𑍋𑌮𑍂𑌲𑌾𑌃 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌾𑌃 𑌮𑌮 𑌰𑌾𑌜𑌨𑍍 𑌨 𑌸𑌂𑌶𑌯𑌃 ।"

என்றும், மஹாகவி காளிதாஸன் ப்ரயோகத்தில் (ரகுவம்சத்தில் மூன்றாவது ஸர்க்கத்தில்) கோ பூஜையினால் ஏற்பட்ட க்ஷேமங்கள் நன்றாய் ப்ரதிபாதிக்கப்பட்டும் இருக்கின்றன. '𑌵𑌿𑌸𑍃𑌷𑍍𑌟𑍇 𑌗𑍋𑌷𑍁 𑌸𑌂𑌵𑌦𑌮𑍍' என்று பசுமாடுகள் எந்தத் தேசத்தில் நன்றாய்ப் பூஜிக்கப்பட்டு வருகின்றனவோ, அந்தத் தேசமே ஸுபிக்ஷமாக இருக்குமென்று இதிஹாஸ புராணங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது.

"𑌯𑍋 𑌹𑌿 [illegible]𑌜𑌂 𑌹𑌨𑍍𑌯𑌾𑌦𑍍𑌗𑌾𑌂 𑌚 𑌲𑍋𑌕𑌸𑍍𑌯 𑌮𑌾𑌤𑌰𑌮𑍍 ।
𑌶𑌰𑌣𑌾𑌗𑌤𑌂 𑌚 𑌯𑍋 𑌹𑌨𑍍𑌯𑌾𑌤𑍍 𑌤𑍁𑌲𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑍇𑌷𑌾𑌂 𑌚 𑌪𑌾𑌤𑌕𑌮𑍍 ॥"

என்றன்றோ சாஸ்த்ரங்கள் உத்கோஷிக்கின்றன?

இப்படி, பசுக்கள் ஸுகமாக இருந்தால் எல்லா க்ஷேமங்களும் லோகத்துக்கு உண்டா மென்றும், பசுவதம் செய்தல் ப்ரஹ்மஹத்யாதி பாதகங்களுக்குத் துல்யமென்றும் சொல்லியிருப்பதால், பசுவதம் செய்யாமலிருக்கும்படி அரசாங்கத்தார் சட்டம் செய்யவேண்டு மென்று எழுதப்பட்டது.

———

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

[7-ம் அங்கம்]

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A., B.L.,
அட்வோகேட், திருச்சி.]

[விவேகர், ஸுமதி, வ்யவஸாயர் ப்ரவேசிக்கிறார்கள்.]

வ்யவஸாயர்:—ஸர்வாச்சர்யமான இந்தச் சித்ரசாலையைப் பார்க்கவேணும். இது சித்த வ்ருத்தி மண்டபம். இந்தச் சாலையில் சித்ரம் எழுதப்படாத சுவர்களில் கூட, சித்ரம எழுதப்பட்ட மற்றைச் சுவர்களிலிருந்து சித்ரங்கள் ப்ரதிபிம்பிப்பதால், எங்கும் சித்ரங்கள் எழுதப்பட்டனபோல் சுவர்கள் யாவும் ஜ்வலிக்கின்றன. பலகணிகள் ஒன்றுக்கொன்று ப்ரதிபலிப்பதால் பலபல உருவங்கள் தோன்றுகின்றன. 'ரூபம் ரூபம் ப்ரதிரூபோ பபூவ' என்று ச்ருதி ஓதிய பரமாத்ம ரூப ப்ரதிப்லநங்கள் இங்கே பல பலவாகக் காணப்படுகின்றன.

"ப்ராணா ப்ரத்யாஹ்ருதா கஸ்மிந் ததாநந்தவிகல்பதா: ।
கவி ஸம்பாதி ஸாஸீதி ஸவந்தீவ ஸவந்தி ந: ॥"

இங்கே இந்த நிபுணனான ஶில்பி எழுதியிருக்கும் அவதார விஷய சித்ரங்களை மஹர்ஷிகள் பாடிய இதிஹாஸ புராண ப்ரமாணங்களை நன்றாய் ஓதி, அங்கே அவர்கள் மகிழ்ந்து பாடிய ரீதியிலே மிகவும் பக்தி ச்ரத்தையோடு ஜாகரூகராக அமைத்திருப்பதால், இந்தச் சித்ரங்களில் கடந்த அவதாரக் காட்சிகளும், இனி வரப்போகிற அவதாரக் காட்சியும், இப்பொழுது வர்த்தமாநத்தில் நம் கண் முன்னே ப்ரத்யக்ஷமாயிருப்பனபோல் விளங்குகின்றன. [வால்மீகி மஹர்ஷியின் ஆதி காவ்யத்தில் கவி சித்ரத்தை அநுபவிப்பவர்க்கு 'அரதிவ்ரதத்வ ப்ரத்யக்ஷமிவ தர்சிதம்' என்றபடி, பஹு காலத்துக்கு முன் நடந்த வ்ருத்தாந்தங்கள் இப்போது இதோ கண்முன் ப்ரத்யக்ஷம்போல் காணப்படுகின்றன. முராரியின் நாடகம் இரண்டாம் அங்கத்தில்,

"கவித்வாஸீஜ்ஜிஹ்வாம்ஸவாதயஸாஷேஷண அக்ஷுஷா ।
காலோ ஸம்ப்ரதவிஷ்ணாஸ வர்த்தமாநா நதீவிஸம்ரு ॥"

"விச்வாமித்ர மஹர்ஷி தம்முடைய ஆர்ஷ ஜ்ஞாநத்தில் காலோபாதியைத் தாண்டி போன காலத்தையும் வருங் காலத்தையும் நிகழ் காலத்தில் நுழைப்பித்து வர்த்தமாநம் போல் ஸாக்ஷாத்கரித்தார்" என்று கூறப்பட்டது. இங்கே சித்ரமெழுதிய ஶில்பியின் ஶில்பத் திறமையால் சென்ற காலக் காட்சிகளும் வரப்

போகும் காட்சிகளும் இப்பொழுது கண்முன் நிகழ்வனபோல் அத்தனை தெளிவாய் விளங்குகின்றன. 'ஸவந்தி' என்ற பதம் இங்கு இரண்டு தரம் படித்துள்ளது. இரண்டாம் 'ஸவந்தி'க்கு 'ஆகின்றன' 'இருக்கின்றன' என்பது பொருள். முதல் 'ஸவந்தி'க்கு 'வர்த்தமாந காலப் பொருள்கள்' என்பது பொருள். அக்காட்சிகள் கண்முன்னால் இருக்கும் வர்த்தமாந காலப் பொருள்கள் போல் ப்ரகாசிக்கின்றன.

விவேகர்:—[சுற்றிலும் கண்களைச் செலுத்தி] தேவி! இந்த அபூர்வமான அத்புதத்தைப் பார். இதற்கு இதைத் தவிர வேறு உவமை காண்கிலோம். ஆனாலும் ஓர் உவமை உண்டென்று சொல்லலாம். அது யாதெனில்:

" வரிமித உவரிமிதா நா ஶாஷ்வதஸ்ரீக்ஷ்வரஜாதாநாம் ।
தஹர மம நாஹியா நம் திவ்யம் வக்ஷ்யஷம் நிஶமயதி ॥ "

அளவிலடங்காத உலக சித்ரங்கள் எல்லாவற்றையும் தரிக்கும் இச்சிறு (சித்ர) மண்டபத்துக்கு, தஹராகாஶ மென்னும் நாமத்தை வஹிக்கும் திவ்ய புருஷன் த்ருஷ்டாந்த மாகிறார். அவரை ஒக்கின்றது இம்மண்டபம்.

சாந்தோக்யத்தில் தஹர வித்யா வாக்யத்தில், 'ப்ரஹ்மபுரம் என்னும் ஶரீரத்தில் ஹ்ருதய மென்கிற தாமரைப் பூ மாளிகை உள்ளது; அதனுள்ளே தஹரமான ஆகாஶம் இருக்கிறது; அதற்குள் உள்ளதையும் அதையும் தேட வேணும்; இன்புற்று உபாஸிக்கவேணும்' என்று ஓதப்பட்டுள்ளது. 'தஹரம்' என்பதற்குச் 'சிறியது' என்பது பொருள். ஹ்ருதயம் என்பதே மிகச் சிறியது; மிக ஸூக்ஷ்மம். அதற்குள் இருப்பது அதனிலும் சிறிதா யிருக்க வேணும். இந்த வாக்யத்தில் சொல்லப்பட்ட 'தஹரமான ஆகாஶம் ப்ரஹ்மமே' யென்று ப்ரஹ்ம ஸூத்ரம் தஹராதிகரணத்தில் கூறப்பட்டது. அந்த தஹர வாக்யத்தில் மேலே 'இதோ வெளியில் பரந்துள்ள ஆகாஶம் எத்தனை பெரிதோ அதுபோல் இந்த உள் ஆகாஶமும் (ப்ரமாத்மாவும்) மிகப் பரந்தது. இந்த உள்ளாகாஶத்துக் குள்ளேயே 'த்யாவாப்ருதிவீ' என்னும் லோகங்கள் இரண்டும், அக்கி வாயுவாகிய மா பெரும் பூதங்களும், ஸூர்ய சந்த்ரர் இருவரும், நக்ஷத்ரங்களும், நாம் ஆசைப்படும் வஸ்துக்களில் இவ்வுலகில் உள்ளதும் இல்லாததுமான எல்லாப் பொருள்களும் எல்லாம் நன்கு வீற்றிருக் கின்றன' என்று விச்வம் முழுதும் இந்தச் சிறு ஆகாஶத்துக்குள் தாங்கப் பட்டு நிற்கின்றது என்று வர்ணிக்கப்பட்டுள்ளது. 'இப்பொழுது உள்ளதும் இல்லாததும் ஆகிய எல்லாம்' என்பதில் 'இப்பொழுது இல்லாதது' என்பதற்கு, 'இறந்த காலப் பொருள்களும் எதிர் காலத்தில் வரப்போவதும்' என்பது பொருள். ப்ரஹ்மத்துக்குள் கால த்ரயத்திலுள்ள எல்லாப் பொருள்களும் நிற் கின்றன. இந்தச் சித்ர மண்டபத்திலும், சென்ற அவதாரங்களும் வரப்போகும் அவதாரங்களும் எழுதப்பட்டுள்ளன. இங்கு ஸ்வாமி கூறும் உவமைக்கு ஸத்ருஶமான உவமை காண்பதரிதே. ஸூக்ஷ்மமான மன மென்னும் சித்ரப் பலகையில் முக்காலப் பொருள்களையும் அகண்ட ப்ரஹ்மாண்டத்தையும் எழுதிக்

கொள்ளலாம். (த்யாந ஸம்ஸ்காரம் பலமா யிருந்தால் வரப்போவதையும் ப்ரத்யக்ஷீகரித்து எழுதலாம்.)

[ஆலோசித்து] மற்ருென்றும் இங்கே சொல்லலாம். 'பாலனு யேழுலக முண்டு', 'ஆலமா மரத்தி னிலைமே லொரு பாலகனுய் ஞால மேழு முண்டு',

'வடஸ்ய வத்ரஸ்ய வுடெ ஶயாநம் பாலம் முகுந்தம் மநஸா ஸ்மராமி'

என்றபடி, ஸமஸ்த லோகங்களையும் தன் சிறு வயிற்றுக்குள் நிக்ஷேபம் போல் வைத்திருக்கும் ப்ரளய ஸமய பாலனென்னும் ஆச்சர்யத்தையும் இது உவமை முறையில் நினைப்பூட்டுகிறது. தத்வ முக்தா கலாபம் நாயகஸரம் 75-ம் ச்லோகத்தில், 'விச்வத்துக் குள்ளிருக்கும் ஒரு குழந்தையின் வயிற்றுக்குள் விச்வம் முழுவதும் அடங்கி யிருக்கிறது என்று சொல்வதை யார் தாம் விச்வஸிப்பர்? இது உபேந்த்ரன் இந்த்ர ஜாலமே' என்று ஆக்ஷேபிப்பது யுக்த மல்ல. உபேந்தரன் இந்த்ரன் தம்பியாகப் பகவதவதாரம். 'அவதாரங்கள் உபேந்த்ரனுடைய இந்த்ர ஜாலமே; வெறுந் தோற்றமே; ஸத்ய மல்ல' என்பது பூர்வ பக்ஷியின் பரிஹாஸம். ஆச்சர்ய ஶக்தியுள்ள பகவானுடைய இந்த ஆச்சர்யச் செய்கை உண்மை யென்றே பரமாப்தர்களான மஹர்ஷிகள் நேரில் கண்டு கூறி யிருக்கிறார்கள். பகவானுடைய விக்ரஹம் விபூதி முதலியவற்றிற்குச் சுருங்கவும் விரியவும் அபரிமிதமான சக்தியுண்டு; பகவானுடைய இச்சைப்படி மற்றெந்த வஸ்துவையும் போன்றதாகக் காணும்படி செய்யவும் ஶக்தியுண்டு; ஸூக்ஷ்ம ஸ்தூலாவஸ்தைகளை அடையும் ஶக்தியும் உண்டு. விக்ரஹம் எவ்வளவு சிறிய தானுலும், அதனல் காட்டப்படும் ஸ்வரூபம் அகண்டம் என்று கூறப்பட்டது. மார்க்கண்டேயர் இக்காட்சியை நேரில் கண்டு ஆச்சர்யப்பட்ட விஷயம் ஸ்ரீ பாகவதத்தில் வர்ணிக்கப்பட்டுள்ளது. 'மார்க்கண்டேயனும் கரியே' என்றது அதைக் குறிப்பதே. அவர் நேரில் கண்டதை வந பர்வத்தில் அவர் பாண்டவர்களிடம் கூறினர். அவர் தாமரைத் திருவடிகளை ஶிரஸ்ஸில் தரித்து வந்தநம் செய்ததையும் கூறினர். மேலும்,

"நைச்ஶ்ருயாஹ்யஸ்ய ஸுஶ்ரிகாவணிதகாஶ்ஷ:
கல்பம் சித்ரம் கிஞ்ச ஸந்தோஷஶ்ரித்வாழ ।
நாநாகாராம் ஹாவ நாஜேவ ஶிஶ்ரீ
ஶிஶுவத்ராஜாஹமநஶ்சித்ராஜஹார ॥"

இந்தச் சித்ரம், சித்ர சலாகை வர்ணப்பசை முதலிய வெளி த்ரவ்யங்களை உபகரணமாகக் கொண்டு எழுதப்பட்டதல்ல. மநஸ்ஸில் பொங்கி வழியும் ஸந்தோஷம் தான் இங்கே வர்ண த்ரவ்யம்; அதனல் பூசப்பட்டது; அநேக வடிவங்களாகப் புத்தியில் பாவனை செய்யப்பட்ட பகவதாகார ரூபங்கள் அப்படியே நெஞ்சு நிரம்பி வெளியே வெள்ள மிட்டோடி வந்திருக்கின்றன. [ஶாகுந்தலத்தில், துஷ்யந்தன் ஶகுந்தலையை வர்ணிக்கையில், 'ப்ரஹ்மா சித்ரத்தில் எழுதி, அந்தச் சித்ரத்திற்கு அப்படியே உயிரைக் கொடுத்துவிட்டாரோ? அல்லது சித்ரத்திலும் வர்ண த்ரவ்யங்களையும் சலாகையையும் கொண்டு எழு

தாமல், உயர்ந்த அழகுகளைத் தம் மநோராஜ்யம் சென்றபடியெல்லாம் மநஸ்ஸினுலேயே சேர்த்து நிர்மாணம் செய்துவிட்டாரோ?' என்று சொல்லப்பட்டிருக்கிறது.]

“ ஶுத்தஸ்ருஷ்டி விஷயம் ஸாரம் ஸர்வஸ்யாஶ்ரயம் ।
அபி க்ருத்ஸ்ந கோடிஷ்வபி த்ருஷ்டிஸ்தவ திரஸ்க்ருதே ॥”

ஸர்வ ப்ரகாரங்களாலும் சித்ரமாய் (ஆச்சர்யமாய்) இருக்கும் இந்த விச்வ சித்ரத்தில் உன் கண்கள் அசுத்தமும் கொஞ்சமுமான ஸம்ஸார ப்ரபஞ்சத்திலே செல்லுகின்றனவா? ‘பாதோऽஸ்ய விஶ்வா பூதாநி த்ரிபாதஸ்யாம்ருதம் திவி’ என்கிற ச்ருதிப்படி ஆநந்த விபூதி மூன்று பங்கு; மிகப் பெரிது. ஸம்ஸார மண்டலம் முழுதும் சேர்ந்து ஒரு பங்கு; மிகச் சிறிது.

“ ஸ்வச்சாயிதாந்தர்த்ருஷ்டீநாம் ஸ்வகுணாவ்ருதித்ருஶ்யதாம்
குணத்ரயவிபக்தா யவநிகேயமாஹிதா ।
தத்ர ஸம்ஸாரஜ்வரஜ்வலநஜநநஹேதோ: ஸ்வயா
திரஸ்கரணித: பரம் ப்ரக்ருதிருக்ஷ்யா த்யஜ்யதாம் ॥ ”

சிறந்ததான ஞானக் கண்ணுல் உள் தத்வத்தைப் பார்த்து அநுபவிக்க ஆசைப்படுமவர்களுக்கு இந்த ப்ரக்ருதி (முக்குண மாயை) குறுக்கே திரையாக மறைக்கிறது. ஸம்ஸார மென்னும் தாப ஜ்வரத்தில் வேகச் செய்யும் அசுத்த ஸ்ருஷ்டியான மாய ப்ரக்ருதியைப் பார்ப்பதற்கே வெட்கப்படவேண்டும். அந்த ப்ரக்ருதிப் பேயைக் கண்ணெடுத்துப் பார்க்கக் கூடாது.

[‘மந்மயா மாமுபாஶ்ரிதா: ।’ ‘பஹவோ ஜ்ஞாநதபஸா பூதா மத்பாவமாகதா: ।’ ‘யோ மாம் பஶ்யதி ஸர்வத்ர,’ ‘ப்ரஹ்மமயேந சக்ஷுஷா’ என்றபடி ஸர்வத்ர ப்ரஹ்மத்தையே பார்க்கும்படி ஓயாமல் அப்யாஸம் செய்யவேண்டும். ‘அந்தர்பஹிஶ்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித:’ உலகத்தில் ஸகல பொருள்களிலும் உள்ளும் வெளியும் வ்யாபித்திருப்பது ப்ரஹ்மமே [‘விஶ்வஸ்யைகம் பரிவேஷ்டிதாரம்’] என்று பல்கால் ச்வேதாச்வதரோபநிஷத் படித்தது. உள்ளே வ்யாபித்திருப்பது மன்றியில், வெளியில் உலகத்தையே மூடிச் சூழ்ந்திருக்கும் தேஜோமய ப்ரஹ்மத்தைப் பார்க்காமல் (உயிரான ப்ரஹ்மத்தைப் பார்க்காமல்) உயிரல்லாத இருள்மயமான உடலைப் பார்ப்பது ஆத்ம ஞானப் பயிற்சிக்கு விரோதமே.]

ஸுமதி :—பஹு கால வாஸநைகளால் கண் அங்கே இழுக்கப்படுகிறது. இப்பொழுது தேவரீர் கட்டளைப்படி அங்கிருந்து அதைத் திருப்பி இழுத்து விட்டேன்.

வ்யவஸாயன் :—சுத்த ஸ்ருஷ்டி பாகத்திலேயே உங்கள் இருவர் கண்களும் செல்ல வேண்டும். கண்களுக்குப் பரிசிதமான ஜாதியான பொருள்களில் அவை எளிதில் விருப்புடன் செல்லும். மீன் ஆமை ஏனம் சிங்கம் மனிதர் முதலிய யோநிகளில் அத்யந்த ஸஜாதீயமாய் அப்படியப்படியே அவதரித்த

அவதாரங்களின் உண்மையையும் மஹிமைகளையும் உள்ளபடி அறிந்தவர் இந்தத் தேஹம் முடிவிலேயே பந்தமற்றுப் பகவானை அடைவரென்று பகவானே பாடியுள்ளார்.

“ ஶங்க்ஷணத்யாநஸம்ஸ்பர்ஶைர் மத்ஸ்ய கூர்ம விஹங்கமா: ।

ஸ்வாந் ஶிஶூந் போஷயந்த்யேவம் ஹம்ஸ ரூபோ ஹரி: ஸதா ॥ ”

மீன்கள், குஞ்சுகளைக் கண்ணால் பார்ப்பதாலேயே (வீக்ஷணத்தாலேயே) வளர்க்கின்றன ; ஆமைகள் தொடர்ந்த நினைவென்னும் த்யாநத்தாலேயே தம் குட்டிகளை வளர்க்கின்றன; பக்ஷிகள், தங்கள் இரக்கைகளில் இடுக்கி அடைகாப்பதால் குஞ்சுகளை வளர்க்கின்றன. மத்ஸ்ய கூர்ம ஹம்ஸ மெனும் அவதாரங்களைச் செய்யும் பகவான், ‘ ததைக்ஷத ’ என்றபடி, ஈக்ஷணம் செய்து ப்ரஜைகளை ஸ்ருஷ்டித்துத் தன் கடாக்ஷங்களால் வளர்க்கிறார்.

‘ ஸோऽபித்யாய ஶரீராத் ஸ்வாத் ஸிஸ்ருக்ஷுர் விவிதா: ப்ரஜா: ’

என்று மநு கூறியபடி, ஸங்கல்ப த்யாநம் செய்து தன்னுடைய ஶரீரத்திலிருந்தே விவித ப்ரஜைகளை ஸ்ருஷ்டிக்கிறார்.

“ ஸ தபோऽதப்யத। ஸ தபஸ்தப்த்வா। இதம் ஸர்வமஸ்ருஜத ”

என்ற ச்ருதிப்படி பகவான் தயா ஆலோசநத்வம் செய்து ப்ரஜைகளை ஸ்ருஷ்டிக்கிறார். ‘ ஆநந்தமய பக்ஷி ; அஞ்சிறைய அந்தர்யாமிப் பக்ஷி ’ என்று ச்ருதி கூறியபடி, விஜ்ஞாந மய பக்ஷி என்னும் ஜீவப் பக்ஷியைத் தன் பக்ஷங்களுக்குள் வைத்துக்கொண்டு காத்து வருகிறார். மத்ஸ்ய கூர்ம ஹம்ஸ யோநிகளுக்கு முறையே ஈக்ஷண த்யாந ஸம்ஸ்பர்ஶங்களால் ப்ரஜைகளை வளர்க்கும் ஸ்வபாவத்தைக் கூறுவதில், ப்ரஜைகளை ஸ்ருஷ்டித்து வளர்க்கும் விஷயத்தில், ஈக்ஷண அபித்யாந தாரண விஷயமான ப்ரமாணங்களையும், மீன் பக்ஷி ஆமை ஜாதிக்கேற்ற வ்யாபாரங்களையும் வ்யஞ்ஜநம் செய்கிறார்.

‘ வேதோத்தாநே த்வஹஜநவிதௌ ஸம்ஶயம் விஶ்வதேது: ’

என்று ஹம்ஸ ஸந்தேஶத்தில் வேத ஸமுத்ரம் மிச்ரமாயும் குழப்பமாயும் இருந்ததைப் பிரிப்பதற்குப் பகவான் ஹம்ஸாவதாரம் செய்தாரென்று கூறப்பட்டது.

[தொடரும்.]

ஸ்ரீயை நமஃ

ஆலயமும் ஆகமமும்

[ஸ்ரீ. உப. தி. ஈ. வீரராகவாசார்ய ஸ்வாமி, ஸம்ஸ்க்ருத காலேஜ், திருவையாறு]

இந்தியாவிலுள்ள விஷ்ணு சிவாலயங்களில், ஆகம விதியின்படி, வைதிக முறையில் ப்ரதிஷ்டை, பூஜை, ப்ராயச்சித்தம் ஆகிய இவை பல்லாயிரம் வர்ஷங்களாக நடைபெற்று வருகின்றன வென்பது ஸுப்ரஸித்த மானது. ஆகம தத்வங்களை நன்குணர்ந்து ஆலயங்களில் ஆவச்யகமான சீர்த்திருத்தங்களை அதிகாரிகள் செய்வது போற்றத்தக்கதாகும். ஆகம சட்டங்களுக்கு முரண்பட்டு அரசாங்கத்தார் இயற்றும் சட்டங்களை ப்ரஜைகள் பின் பற்றுதலில் ஆத்ம க்ஷேமம் பாதிக்கப்படுகின்றது. கிறிஸ்துவர் முஸல்மான்கள் போன்ற மதத்தினர் ஒவ்வொருவரும், தங்கள் ஈச்வரன் ஆணைக்கு உட்பட்டே ஆத்ம க்ஷேமத்தை உறுதியாகக் கொண்டிருக்கிறார்கள். பகவத்கீதை, வேதம், ஆகமம் ஆகியவற்றை உபதேசமாகக் கொண்டவர்கள், தாங்களே அவ்வுபதேசத்தைப் புறக்கணித்துச் சட்டங்களை இயற்றுவது, வேலியே பயிரை அழிப்பதை ஒக்கும். ஆசௌசம் முதலியவற்றால் தீண்டத் தகாதவர் ஆலய ப்ரவேசம் செய்தால், விசேஷ ப்ராயச்சித்தங்கள் ஏகமுகமாக ப்ரமாணங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. ஸ்வயம் வ்யக்தம், தைவம், ஆர்ஷம், மாநுஷம் ஆகிய நான்குவித ப்ரதிஷ்டைகளில் ப்ராயச்சித்த முறையில் மாறுதலில்லை. மாநுஷாலயத்தில்தான் ப்ராயச்சித்தம் என்று கொள்வதற்கு இடமேயில்லை. பாத்ம ஸம்ஹிதை சர்யாபாதத்தின் 18-வது அத்யாயத்தில்,

"ஶ்வபசே ஶூத்ர சாண்டாலே ஶூத்ர சாண்டால ஸஹிதைஃ ।
ப்ரவிஶதி ப்ரவிஷ்டம் சேத் ப்ராகாராவரணாந்தரம் ।
ஸஹஸ்ர கலஶைஶ்சைவ ஸ்நாபயேத் தஸ்ய ஶாந்தயே ।
ப்ரோக்ஷயேச்ச பஞ்சகவ்யேந புண்யாஹம் வாசயேச்ச ॥

என்றுள்ளது. சண்டாளர் ச்வபசர் முதலியோருடைய ஆலய ப்ரவேசத்தில் புண்யாஹவாசநம், பஞ்சகவ்ய ப்ரோக்ஷணம், ஸஹஸ்ர கலசாபிஷேகம், இவை பிம்பங்களுக்கு ப்ராயச்சித்தமாகச் சொல்லி யிருக்கின்றன. ஈச்வர ஸம்ஹிதையிலும், 19-வது அத்யாயத்தில் :

"க்ஷ்வரைஶ்சாபி ஸம்ஸ்ப்ருஷ்டே உதக்யா ஸூதிகாதிபிஃ ।
சண்டாலைஶ்ச ஸந்நிக்ருஷ்டே ஸ்ப்ருஷ்டே ஸூதகிபிர் நரைஃ ।
ஸவர்ணகம்ஸாநு பரித்யஜேத்"

இத்யாதியாக ப்ராயச்சித்தம் சொல்லப்பட்டுள்ளது. ஸ்ரீ ப்ரச்ந ஸம்ஹிதை 50-வது அத்யாயத்தில் :

"அண்டஜோபலவாஹநாதி........ஜலத்ரோணா ப்ரவிஶேத்யதி
ஸம்ப்ரோக்ஷணம் ததஃ கார்யம் ஶாஸ்த்ரத்ருஷ்டேந" வசநா என்றும்,

"ப்ராகாராவரணாந்தேऽபி ஶ்வஜம்பூம்ஹாவநாத்மகம் ।
சண்டாலாதிஷ்வ யாதேஷு நவபிஃ கலஶைஃ ஸ்நபேத்"

என்றும் ப்ராயச்சித்தம் முற்கூறிய முறையில் சொல்லப்பட்டிருக்கிறது. வைகாநஸாகமத்தில் பாதுகார்ச்சநா படலத்தில்:

" [illegible] ப்ராகாராந்தத: ।
[illegible] தைவோ விநஶ்யதே ॥ "

என்று தைவ ஸாந்நித்யமானது தீண்டாதார் ஆலய ப்ரவேசத்தினால் போய் விடுகிற தென்று உள்ளது. காரணகமத்தில்:

" [illegible] ப்ராகாராப்யந்தரே யதி ।
ரஜஸ்வலா [illegible] ।
[illegible] ராஜ்ஞோ [illegible] ச
[illegible] க்ஷய: ப்ரோக்த: [illegible] ॥ "

சிவாலயத்திலோ விஷ்ணுவாலயத்திலோ ப்ராகாரத்திற்குள் ரஜஸ்வலை சண்டாளர் ப்ரவேசிப்பதால் தைவ ஸாந்நித்யம் அழிந்து, அரசன் க்ராமம் பயிர் முதலியவற்றின் க்ஷயமும் ஏற்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இவ்வாறாக: ஸ்ரீ பாஞ்சாத்ரம், வைகாநஸாகமம், ஸைவாகமம் ஆகியவற்றில் ஏகமுகமாகவே ப்ராயச்சித்தம் சொல்லியிருப்பதை ஆஸ்திகரான அரசாங்கத்தார் புறக்கணித்தல் தகுதியோ? இது முறையோ? தர்மம் தானோ? வைகாநஸர் பாஞ்சராத்ராலயங்களிலும், பாஞ்சராத்ரிகள் வைகாநஸாலயங்களிலும் பூஜை செய்ய ஆகமம் அநுமதி செய்யவில்லை. இதை ஒரு இகழ்வாக வைதிகர் யாரும் நினைக்கவில்லை. வைஷ்ணவர் சிவாலயங்களில் சென்று தொழுவதை ராஜாங்கச் சட்டம் பாதிக்கவில்லை. ஆகிலும் அவ்வுரிமையை வைஷ்ணவர் இன்றளவும் கொண்டாடவில்லை. முஸ்லிம்கள் கிறிஸ்தவர் ப்ரிட்டிஷார் முதலியோர் ஸைவ வைஷ்ணவாலயங்களில் ப்ரவேசிப்பதில்லை; அதை யாமும் இசையவில்லை. ஆலய ப்ரவேச உரிமை தங்கட்கு இல்லாமையால், தங்களுக்கு அதனால் குறையேற்பட்டதாக அவர்கள் நினைப்பதுமில்லையே! தங்கள் மதங்களுக்கு ஆள் திரட்டுவதற்காகவும், தங்கள் ஆதிபத்யத்தை இந்தியாவில் நிலைநாட்டுவதற்காகவும், கிறிஸ்துவர் முஸ்லிம்கள் ப்ரிட்டிஷார் போன்றவர்கள் ஜாதிச் சண்டையை இந்து மதத்திலே கிளப்பிவிட்டார்கள். காங்க்ரஸ்ஸார் ஜாதி மத வேற்றுமை கூடாது என்கிற பகுதியின் கருத்தை, நாளடைவில் பிறர் ப்ரசாரத்திற்கு அநுகுணமாக மாற்றினர். ஸநாதநிகளும் ஜாதி மத வேற்றுமைகள் கூடாவென்றே கொண்டிருக்கிறார்கள். இயற்கையான வேற்றுமையை மறுக்கவில்லை. அவரவர் சாதி மத தத்வத்தின்படி அவரவர் நடந்துகொண்டு மன ஒற்றுமைப் படவேண்டுமென்பதே இதன் நோக்கம். திலகர் மாளவ்யா போன்ற ப்ரபல காங்கிரஸ் வாதிகள் இயற்கையான சாதிமத வேற்றுமையில் மன ஒற்றுமையே கொண்டார்கள். இன்றளவும் இயற்கை வேற்றுமை காங்க்ரஸ்காரிடம் பெரும்பாலும் காண்கிறது. வேற்றுமையில் ஒற்றுமையே வேண்டும். ஒரே ஜாதியாராகிய ப்ரிட்டிஷார் அமெரிக்கர் ருஷ்யர் ஜர்மனியார் போன்றவர்களிடையே த்வேஷம் முற்றியிருப்பதை நாம் காண்கிறோம். இயற்கை சாதி வேற்றுமையால் வந்த சண்டையன்றோ அவர்களுக்கு? கௌரவ பாண்டவ யுத்தமானது சாதி மத வேற்றுமையால் ஆனதன்றே? 'ஜ்ஞாதி பேதோ நதே நகிம்?' என்கிறார் ஒரு கவி.

'अथ केन प्रयुक्तोऽयं पापं चरति पूरुषः ।
अनिच्छन्नपि वार्ष्णेय बलादिव नियोजितः ॥'

என்று அர்ஜுனன் கேட்டான். அதற்கு,

"काम एष क्रोध एष रजोगुणसमुद्भवः ।
महाशनो महापाप्मा विद्ध्येनमिह वैरिणम् ॥"

என்று பதிலளித்தார் ஸ்ரீ க்ருஷ்ணன். 'பாபம் என்று தெரிந்திருக்கச்செய்தே பலவத்தாக இதைப் புருஷன் செய்கிறுனே என்ன காரணம்?' என்று அர்ஜுனன் கேட்டதற்கு, 'காம க்ரோதங்களே அதற்குக் காரணம். ஆந்தர சத்ருக்கள் அவைகள்; அவற்றை அகற்ற வேணும்' என்ருர் பரமாத்மா. த்வேஷத்திற்குக் காரணம் இவையேயன்றி, சாதி மத வேற்றுமைகள் அல்ல என்பது சாஸ்த்ரங்களுக்கும் அநுபவத்திற்கும் ஒத்த விஷயம். ஒடுக்கப்பட்ட வகுப்பினரிடம் விசேஷ சலுகையைக் காட்டுவதில் ஸநாதநிகளும் உடன்பட்டிருக்கிருர்கள். 'लोकाः समस्ताः सुखिनो भवन्तु' என்று நாடோறும் ப்ரார்த்திப்பவர் ஸநாதநிகளே. 'स्वस्त्यस्तु सर्वाशेषवर्णानां सर्वजनजातिकानां सदा' என்று எல்லா மனிதரும் ஶாச்வத க்ஷேம மடையவேண்டு மென்பதாகப் பராஶர ப்ரஹ்மர்ஷி ஆசாஸநம் பண்ணினர். ராஜ விச்வாஸம் என்பது ஸநாதந தர்மத்தின் உயிர்.

'स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः'

என்பதாக ராஜ க்ஷேமத்தையே திநந்தோறும் ஆசாஸிக்கிருர்கள் வைதிகர். 'राजाधिराजो विजयी भवतु' என்பதாக ஆசீர்வாதம் செய்வது வழக்கம். ப்ரக்ருதி ஸம்பந்தத்தாலும், அஜ்ஞாநாதிகளாலும், சாதி மத த்வேஷமும் அஹங்கார மமகாரங்களும் இடையிடையே புகுந்து விடுகின்றன. அவை சாஸ்த்ர ஸம்ப்ரதாயங்களிற் சேர்ந்தவை யன்று. ஆலயங்களில் மனித ஸ்வபாவத்தினல் சிறிய குற்றங் குறைகள் காணக் கூடும். அவற்றை ஓர் உதாரணமாக்கி, ஸமாதாந மற்ற அநீதியைச் சட்டமாக்குவது பலாத்காரச் செயல். இதனல் கொள்கையை மாற்ற இயலாது. ராவணுதிகளின் பலாத்காரத்தினல் ஸீதையின் கற்பு அணுவளவும் பாதிக்கப்படவில்லை. ஸ்ரீ பெரியநம்பிகள், கூரத்தாழ்வான், ச்ருதப்ரகாசிகாசார்யர், பிள்ளை லோகாசார்யர் போன்ற மஹநீயர்கள் தங்கள் சரீரத்தை த்ருணமாக எண்ணி மத ஸம்ரக்ஷணமும் ஆலய ஸம்ரக்ஷணமும் செய்தருளியது பேர்க்கவும் பேராது. கம்ஸாதிகள் தர்மம் நடக்கவொட்டாமல் கூட்டமாய்த் தீங்கு செய்ய,

"ते वैदिका द्विजवराः क्षत्रवराश्चार्यकेकयाद्य ।
सहके तदनन्तरं प्रययुर्नाः ज्ञातयः पयस्वाहसते ॥"

என்று பகவத் பக்தர்கள் மறைந்தும் அவர்களை அநுஸரித்தும் நின்று மதத்தைக் காப்பாற்றினர்கள் என்பதாக ஸ்ரீ பாகவதத்திலிருந்து தெரியவருகிறது.

பாகிஸ்தான் முஸ்லீம்கள், ஹிந்துக்களை ஆயுதங்களால் தாக்கி விரட்டுகிருர்கள். ஹிந்துக்களும் அவர்களோடு சேர்ந்து ஸநாதநிகளை விரட்டுகிருர்கள். 'संघे शक्तिः कलौ युगे' என்று போதுமான ஸமுதாய பலம் ஸநாதநி

களுக் கில்லை. இவர்களுடைய சாஸ்த்ர விச்வாஸம், தைவ விச்வாஸம், ராஜ விச்வாஸம், அஹிம்ஸை முதலிய தர்மங்களே இவர்களைக் காப்பாற்றவேண்டும். 'சாஸ்த்ரீய ஸரணியில் ஆலயங்களில் ப்ராயச்சித்தம் செய்யாமல் பூஜை செய்தலையே ஆகமம் இசைய வில்லை.' ஆகவே ஸநாதநிகள் ஆலய பஹிஷ்காரம் செய்யவேண்டிய தாயிற்று. ஆனாலும் அர்ச்சகர் பரிசாரகர் தீர்த்தகாரர் போன்ற மிராசு கைங்கர்ய பாத்யஸ்தர் மாத்ரம் முன்போலவே ஆராதநம் கைங்கர்யங்களைப் பண்ணிவர வேண்டும் என்பதாக, ஸ்ரீ காஞ்சியில் கும்பகோணம் ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் பல வைதிக வைஷ்ணவ வித்வான்கள் ஸபையில் முடிவு செய்திருக்கிறார்கள். ஸ்தாநிகரும் விலகுவதாகில், பூஜைலோபம் அல்லது விஜாதீயர் பூஜை போன்ற தீமைகள் ஏற்படும். திவ்யமங்களவிக்ரஹங்களை ஒருவாறு பாதுகாத்துவரவேண்டியதா யிருக்கிறது. ஷை ஸ்தாநிகர்களுக்கு ஸாங்கர்யாதி தோஷம் ஏற்படுவது வாஸ்தவம். தத்காலம் பள்ளிக்கூடங்களிலும், ஆபிஸுகள் ரயில் மோட்டார் போன்ற விடங்களிலும் வைதிகாபிமாநிகளுக்கு அவர்ஜநீயமாய் ஏற்படும் ஸாங்கர்யத்தையும், அவர்களிடம் மற்ற வைதிகர் பழக்க வழக்கங்களை நடத்தும் கர்மத்தையும் அநுஸரித்து, ஆலய ஸ்தாநிகர் விஷயத்திலும் மற்றவர் நடந்துகொள்ளலாம். சாஸ்த்ர ஸம்மதியைப் பூர்ணமாகக் காட்ட முடியவில்லை. ஔசித்ய மாத்ரத்தை விண்ணப்பம் செய்து கொண்டேன்.

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்.

ஸர்வஜித் ஸ்ரீ கார்த்திகை (வ்ருச்சிக) மீ

16—11—47	1உ	ஞாயிற்றுக்கிழமை ...	வ்ருச்சிக ஸங்க்ரமணம் (28–52) தர்ப்பணம். துலா- வ்ருச்சிக சுக்ல சதுர்த்தி திதி
18—11—47	3உ	செவ்வாய்க்கிழமை ...	ஸ்ரீ. அ. மடம் 34-ம் பட்டம் அத்திப்பட்டு ஸ்ரீ சடகோப ராமாநுஜ யதீந்த்ர மஹா தேசிகன் திருநக்ஷத்ரம்
20—11—47	5உ	வியாழக்கிழமை ...	வ்ருச்சிக சுக்ல அஷ்டமி திதி
21—11—47	6உ	வெள்ளிக்கிழமை ...	அதிதி
22—11—47	7உ	சனிக்கிழமை ...	வ்ருச்சிக சுக்ல நவமி திதி
24—11—47	9உ	திங்கட்கிழமை ...	ஸர்வ ஏகாதசி: கைஶிக ஏகாதசி; உத்தாநம்.
28—11—47	13உ	வெள்ளிக்கிழமை ...	பௌர்ணமி– ப்ரதமை திதி த்வயம்: ஸ்ரீ பாஞ்சராத்ர தீபம்: ஸ்ரீ திருப்பாணாழ்வார் ஸ்ரீ திருமங்கை யாழ்வார் திரு நக்ஷத்ரங்கள்
29—11—47	14உ	சனிக்கிழமை ...	வ்ருச்சிக க்ருஷ்ண த்விதீயை திதி
8—12—47	23உ	திங்கட்கிழமை ...	ஸர்வ ஏகாதசி (வ்ரதம், திதி)
12—12—47	27உ	வெள்ளிக்கிழமை ...	அமாவாஸ்யை
13—12—47	28உ	சனிக்கிழமை ...	பகல் பத்து உத்ஸவாரம்பம்
15—12—47	30உ	திங்கட்கிழமை ...	வ்ருச்சிக சுக்ல த்ருதீயை திதி: ராவ ரவி 58–56: தநுஸ் ஸங்க்ரமண தர்ப்பணம் மறு நாள்.

மதுராலாபம்

[ஸ்ரீ. உப. S. T. ஸ்ரீநிவாஸாசாரியர், M. A. வித்வான் L. T., திருவையாறு]

பெரும்பூதூர் வந்த வள்ளலான எம்பெருமானர் வாழ்க்கை நிகழ்ச்சிகளிலிருந்து ஸ்ரீ வைஷ்ணவன் கடைப்பிடித்து ஒழுகுவதற்கு வேண்டிய ஆச்சர்யமான அம்சங்கள் அபரிமிதமா யுள்ளன. அப்பெருமான் போன்றவர்கள், உலகத்தவருக்கு ஒன்றும் உபதேசிக்க வேண்டாம். அவர்தம் தூய வாழ்க்கையே பேசும்; அவர்தம் அன்பே பேசும்.

ஒரு ஸமயம் ஸ்வாமி பெருமூச்செறிந்து, " உலகில் க்ருபணர்கள் இருப்பதுதான் எனக்கு ஆச்சர்யமா யிருக்கிறது. ஸர்வேச்வரனிடமிருந்து தாங்கள் எப்படிப் பெற்றுக்கொண்டார்களோ அப்படியே கொடுக்கவேண்டியது தானே" என்று அருளிச்செய்தாராம்.

ஸ்வாமி சிஷ்ய ரொருவர் மிகவும் முன்கோபியா யிருந்தாராம். மற்றப்படி அவர் நடத்தை மிகவும் ச்லாக்யமாகவே யிருந்ததாம். எம்பெருமானர் அவரை நோக்கி 'நான் சொல்வதைச் செய்வீரா?' என்றார். அந்த ஶிஷ்யர் நடுநடுங்கித் தண்டனிட்டு " ஸ்வாமிந் ! இப்படியும் என்னைச் சோதிக்கலாமா ? நெருப்பில் விழ நியமநமானல், கடப்பேனே ?" என்றார். எம்பெருமானர், 'அதோ தெரிகிறது யாது ?' என்றாராம். சிஷ்யர் 'அது ஒரு தென்னை மரம்' என்றார். எம்பெருமானர் 'அந்த மரத்தை வாய் கூசாது வைதுவாரும்; யோசிக்கக்கூடாது' என்றார். அது கேட்ட சிஷ்யர் சில நிமிஷங்களுக்குப் பிறகு சிரித்துத் கொண்டு வந்தார். எம்பெருமானர் 'மறுபடியும் சென்று அதை வாயாரப் புகழ்ந்துவாரும்' என்றார். சிஷ்யர் அங்ஙனமே செய்துவந்தார். எம்பெருமானர் வெகு மென்மையுடன், ' தூஷண காலத்திலும் ஸ்துதி காலத்திலும் மரத்தில் ஏதேனும் மாறுதல் கண்டீரோ?' என்றார். சிஷ்யர் 'இல்லை' என்றார். எம்பெருமானர் புன்சிரிப்புடன் " ஸ்ரீ வைஷ்ணவன் க்யாதி லாப பூஜைகளை மதியான். அவனுக்கு நிந்தையே பூஷணம். ஸ்துதியாலும் நிந்தையாலும் அவன் கலங்கான். இப்படியிருக்கக் கோபம் அவன் உள்ளத்தில் எப்படிச் செல்லும்? " எனச் சிஷ்யர் வெட்கிச் சென்றாராம்.

எம்பெருமானர் எழுந்தருளியிருந்த இடத்தில் ஆசார்ய ஸந்நிதி யென்றும் திருக்கோயிலாழ்வார் திவ்ய ஸந்நிதி யென்றும் சொல்லிக்கொண்டு திவ்ய கந்தங்கள் கமழும் வழக்கம் ஏற்பட்டதாம். இதைக் கண்டு நடுங்கிய திருவுள்ளமுடைய எம்பெருமானர், ஒரு கழிநீர்ப் பாண்டத்தைப் பலநாள் எடுக்க விடாமல், பலர் பழகும் இடத்தில் விட்டு வைக்கச் செய்தாராம். 'பாகவதர்களுக்கு அபசார மாயிற்றே! துர்க்கந்த மாகிறதே!' என்று ஒரு சீடர் கேட்க, "பாகவத

வ்யாஜத்தால் நம் அந்தராத்மாவையே நாம் த்ருப்தி செய்துகொள்ளுகிறோம். இதை நாம் ஆராய்வது மில்லை; ஒப்புக்கொள்வது மில்லை. மூக்கு நம்மை அடிமைப்படுத்த வருங்கால், நாம் அதற்குச் செய்யும் தண்டனை இதே. ஸ்ரீ வைஷ்ணவன் வீண் வாஸனைகளிலும் துர்காற்றத்திலும் ஒரே மனப்பான்மையாய் அடிமைப்படமாட்டான் '' என்றனராம். மேலும் அவர் கூறியதாவது:—'' நம் நாக்கில் நம்மை யறியாமல் ஏதேனும் பக்ஷ்ய விசேஷங்களைக் கண்டு ஜலம் ஊறினாலும், நம் ஆத்மகுண பூர்த்தியும் இந்த்ரிய ஜயமும் ஒன்று மில்லையென அறியலாம். 'தத் நாஸ்ய தேவதா:' என்னும் ந்யாயத்தால் நாம் ஸர்வேச்வரன் பெயரால் எதை வேண்டுமானாலும் தின்று நாவிற்கு அடிமைப்பட இடமாகிறதல்லவா? இப்படி நம் உள்ளம் வெகு இனிமையுடன் நொட்டைவிட்டு ருசிக்கும் ஒரு தளிகையை த்யாகம் செய்து வேறு பாகங்களை ஸர்வேச்வரனுக்கு நிவேதநம் செய்தால், அதுதான் உத்தமமான ஆராதநம். அநாஸக்தமான உள்ளத்துடன் ஸமர்ப்பிக்கும் நிவேதநமே நிவேதநம்.''

பட்டர் கூறியதாக ஒரு திவ்ய வசந முண்டு. நம்பெருமாள் திவ்ய ஸந்நிதிக்கு, ஸசிஷ்யராக அந்த மஹான் எழுந்தருளுங்கால், திருவீதியில் ஒரு நாய் ஒரு கந்தைத் துணியை இங்குமங்கும் இழுத்து அலைத்து மிதித்துத் துவைத்துக் கிழித்து விளையாடிற்றும். பட்டர் சற்று நேரம் அதைக் கடாக்ஷித்தாராம். அவர் கண்களில் நீர் துளித்ததாம். '' ஸ்ரீ வைஷ்ணவன் தன்னை இந்தக் கந்தை போல ஸர்வேச்வரன் இட்ட வழக்காக ஒப்புக்கொடுத்தா லன்றோ ஸ்வரூப லாபம் பெறுகிறான்? 'களைவாய் துன்பங் களையா தொழிவாய்' 'கண்டாரிகழ்வனவே காதலன்தான் செய்திடினும், கொண்டானை யல்லால் அறியாக் குலமகள்போல்' 'வேம்பின்புழு வேம்பன்றி உண்ணாது' என்ற ஆழ்வார்களும், 'ஸஹதேஹாத்ரு-ஷாஸஸ்ய' 'தத்தஸ்யஸதிரஸம்ஹவெக' என்கிற ஸ்ரீ ரங்கநாயகிப் பிராட்டியும் இந்த நிலையை யன்றோ உணர்த்தினர்'' என்றாராம்.

[இதை வாசிக்கும் மஹநீயர்களுக்கு அடியேன் விஜ்ஞாபநம்:—ஆங்காங்கு, வடவேங்கடம் முதல் தென் குமரி வரையில் உள்ள திவ்யதேசங்களில் வாழப்பெற்ற ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ருத்தர்களான பரம பாகவதர்களின் திருமுகப் பாசுரமாகப் பெற்ற ஐதிஹ்யங்கள் மேலே குறிக்கப்பட்டவை. இவற்றின் சரித்ரபூர்வமான உண்மையைப்பற்றி அடியேன் ஆராய்ந்தவ னில்லை; இவற்றின் விலையிலாத் தன்மையை முன்னிட்டுஆராயவும் போவதில்லை. ஆகவே: சிற்றறிவுடைய அடியேன், இவைபோன்ற இன்னும் சிலவற்றை வெளியிட நியமிக்கும்படி பத்ராதிபரையும் வாசக வர்யரையும் தாளும் தடக்கையும் கூப்பிப் பணிகிறேன்.]

ஸம்புடம் - 6
ஸஞ்சிகை - 10

ஸ்ரீ:

ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2 OCT 1947
MADRAS

ஸம்பாதகர்: வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

: ப்ரசுரிக்குமிடம் :

நெ. 22, மஹாலக்ஷ்மி தெரு, த்யாகராயநகர்,
சென்னை.

October 1947
Vol. 6 No. 1

விஷய ஸூசிகை

1. கோ மஹாத்ம்யம்
2. ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்
3. ஆலயமும் ஆகமமும்
4. பஞ்சாங்க ஸங்க்ரஹம் 2
5. மதுராலாபம் 216
6. ஆலய ப்ரவேசமும் வைதிகர்களின் கடமையும் 218
7. நமது ஸ்திதி 222
8. ஸ்ரீமான் வி. பாஷ்யமையங்காருடை வ்யாசத்திற்கு விடையளிப்பு 224
9. செய்திகள் 226
10. ஸம்பாதகரின் குறிப்புக்கள் 231
11. ஸ்ரீ வேகாஸேது ஸ்தோத்ரம்

வ்யாஸம் எழுதுபவர்களுக்கு விஜ்ஞாபநம்.

1. எழுதி யனுப்பப்படும் வ்யாஸங்கள், மூன்று அல்லது நாலு பக்கங்களுக்கு அதிகப்படாமல் சுருக்கமாகவும் தெளிவாகவும் இருத்தல் வேண்டும்.

2. ப்சுரப்படுத்தப்படாமல் இருக்கும் வ்யாஸங்க ளெல்லாம், தபால் சார்ஜுக்கு வேண்டிய ஸ்டாம்பு அனுப்பப்படும் பக்ஷத்தில், அவை உடனே திருப்பி அனுப்பப்படும்.

3. அநேக வித்வான்கள் மஹத்தான க்ருபையுடன் வ்யாஸங்களை அனுப்பி, அவைகளை உடனே பத்ரிகையில் ப்ரசுரம் செய்ய வேண்டுமென்று நியமிக்கிறார்கள். பத்ரிகையில் இடம் ஸங்குசிதமாக இருக்கிறபடியால், அவர்களுடை நியமநத்தை அவர்கள் இஷ்டப்ரகாரம் நிறைவேற்ற ஸாத்யப்படாமல் இருகிறது. அவகாசம் [illegible] பொழுது அவைகள் யதார்ஹம் ப்ரசுரம் செ[illegible] செய்வதால் ஸம்பவிக்கும் கா[illegible] க்ருபையுடன் க்ஷமிக்க வேண்[illegible]

ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம: ஶ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

ஆலய ப்ரவேசமும் வைதிகர்களின் கடமையும்.

[ஸ்ரீ. உப. வி. ஸ்ரீநிவாஸையங்கார், பனஸ்வாடி பங்களா, கோரேகான், பம்பாய்.]

உலகில் விசேஷ ஞானிகளைத் தவிர்த்து, பரலோக முண்டென்கிற கொள்கையுடையவர் எவரும், இந்த ஸம்ஸாரத்தைத் தண்டி நிரதிசய ஸுகத்தை யடைய ஒரு பிம்பத்தை ஆராதித்தே யாகவேண்டும். இதனை, 'ஸாதகாநாம் ஹிதார்த்தாய' என்பதாலும், 'ஸாதகாநாம் ஹிதார்த்தாய ப்ரஹ்மணோ ரூபகல்பநா' என்பதாலும் அறியலாம். ஏனென்றால்: ஒருவன் எம்பெருமானைக் குறித்து த்யாநம் செய்யவேண்டுமானால் ஒரு திவ்ய மங்கள விக்ரஹம் மநஸ்ஸில் ஏற்படவேண்டும். அதற்கு விக்ரஹாராதநம் தான் அடிப்படை. விக்ரஹாராதநத்தில் நம்பிக்கை யில்லாத ம்லேச்சர் முதலியோரும் ஒரு கோயிலைக் கட்டி, அதைப் பரம புநிதமாகக் கருதித் தொழுவதற்கென வைத்திருக்கிறார்கள். இதனை ஊன்றி நோக்குங்கால், அவர்கள் மதம் விக்ரஹாராதனைக்கு முதற்படியாகிற தென்பது நன்கு விளங்குகின்றதன்றோ? 'எங்கும் நிறைந்த கடவுளை விக்ரஹ ரூபமாக ஆராதிப்பது பொருந்துமா?' என்று அவர்கள் கேட்கும் கேள்விக்கு, 'கடவுள் எங்கும் நிறைந்திருக்க, ஒரு சில இடங்களைக் கட்டி, (அதாவது: மசூதிகள்) அதைப் பரிசுத்தமாகக் கருதித் தொழுவது என்ன ந்யாயம்?' என்ற கேள்வி கிளப்புகிறது.

இப்படியிருக்க: நம் பெரியோர்கள் தீர்க்க த்ருஷ்டிக ளானதால் அவர்கள் நித்ய விபூதியிலிருக்கும் எம்பெருமானை, 'எந்த விதத்தில் அஜ்ஞர்களான நாம் ஆராதிக்கலாம்?' என்பதற்கு வழி காட்டி யிருக்கிறார்கள். ஸாக்ஷாத் வைகுண்ட வாஸியான ஸ்ரீமந் நாராயணன் நம்மை உத்தீர்ணர்க ளாக்க ஐந்து விதமாக அவதரிக்கிறா னென்று நம் பெரியோர்கள் விஶதமாகத் தெரிவித்திருக்கிறார்கள். ஸ்வாமி தேசிகன் இதனை,

"நித்யம் தத்ஸூரிஸேவ்யம் வ்யூஹதஶஜநஹ ஸ்வாவஸ்தேவ:
ஸம்ஸாரம் ஸம்ஸார ஶாந்த்யைவிவஶ்ணுயதி வ்யூஹவைபவைர் விஹாரை:",

என்று ஸ்ரீ அதிகரண ஸாராவளியில் ஸாதித்திருக்கிறார். இதில் பர வ்யூஹ விபவ அந்தர்யாமிகளைப் பற்றி நமக்கு ப்ரக்ருதத்தில் யாதொரு விசாரமு மில்லை. அர்ச்சாவதாரத்தில் பகவான் எழுந்தருளியிருக்கும் தத்வத்தைப் பற்றி மாத்ரம் லௌகிக ரீதியாகக் கவனிப்போம்.

இதை விசாரிக்குமுன், நம் ஹிந்து மதம் எவ்வித விஜ்ஞாந ஶாஸ்த்ரங்களாலும் (உடனேயோ காலவஶத்திலோ) ஒப்புக்கொள்ளக் கூடிய கொள்கைகளையுடைய தென்பதை மறக்கக் கூடாது. தற்காலத்தில் ரேடியோ என்னும் கருவி எல்லாருக்கும் ஸஹஜமாகத் தெரிந்திருக்கும். அதில் தேஶாந்தரங்களில் நடக்கும் உபந்யாஸம் முதலிய நிகழ்ச்சிகள், 'Etherial waves' எனப்படும் ஆகாஶ அலைகள் மூலம் உடனே உலகம் முழுவதும் வ்யாபித்து நிற்கின்றன.

அப்படி நாம் இருக்கு மிடமெல்லாம் தேசாந்தரங்களில் நடக்கும் உபந்யா ஸாதி நிகழ்ச்சிகளைத் தெரிவிக்கும் ஆகாச அலைகள் பூர்ணமாக இருந்தும், நமக்கு அவை உடனே காதில் விழுவதில்லை. விஜ்ஞாந சாஸ்த்ரிகள் சொல்லி யுள்ளபடி பெட்டி ஒன்று செய்து, அதில் அநேக கருவிகளையும் வால்வுகளையும் வைத்து, அவற்றை ஒரு மின்ஸாரக் கம்பியுடன் ஸம்பந்தப்படுத்தி ஸ்விட்ச் போட்டால், உடனே அந்த ரேடியோ ஸெட் ஷ்டி நிகழ்ச்சிகளை உள்ளபடி பேசித் தெரிவிக்கிறது. எப்படி நிகழ்ச்சிகள், ஆகாச அலைகள் ரூபமாக நம்மைச் சுற்றிப் பரிபூர்ணமாக இருந்தபோதிலும், ஷ்டி ரேடியோ கருவி யிருந்தா லொழிய நம் காதில் விழுவ தில்லையோ, அப்படியே ஜகத் முழுவதும் வ்யாபித் திருக்கும் ப்ரஹ்மம் மந்த புத்திகளான நமக்கு ஸாதாரணமாகப் புலப்படுவ தில்லை. ஆனதால், தத்கால விஜ்ஞாந சாஸ்த்ரிகளைவிட எவ்வளவோ மடங்கு உயர்ந்த ஜ்ஞாநிகளான நம் பெரியோர், அந்த ப்ரஹ்மத்தைச் சிற்சில இடங்களில் (கோயில்களில்) விசேஷமாக அறியக்கூடிய வழிகளை சாஸ்த்ர மூலம் கண் டறிந்து இன்ன இன்ன மாதிரி லக்ஷணங்களுடன் திவ்ய மங்கள விக்ரஹங் களை எழுந்தருளப் பண்ணி, இன்ன இன்ன ப்ரகாரம் மந்த்ர ப்ரதிஷ்டை செய்து சாஸ்த்ர விஹிதமான ஸம்ஸ்காரங்களைச் செய்தால் பகவத் ஸாந்நித்யம் ஏற்படு மென்று சொல்லியிருக்கிறார்கள். இது ப்ரத்யக்ஷத்தில் தெரிவதுடன், மற்றவர் களும் மேலே கூறிய உதாஹரணத்தைக் கொண்டு நம்பத்தான் வேண்டும்.

சாஸ்த்ரத்தில் சொல்லியுள்ள விஷயங்கள் எல்லாவற்றிற்கும், காரணம் கேட்க முடியாது. உதாரணமாக: நவீந காலத்தில் ஆகாய விமாநம் தோற்று முன், ரகுவம்சத்தில்,

" வஸிஷ்டஸ்ய ஜ்ஞாக்ஷணஜாவாஹா வாத-ஷ்ட நதாகாஸஹ்யயேஷ-। "

[தசரதன் பத்துத் திக்கிலும் ரதத்தைச் செலுத்தவல்லவனாதலால், அவனுக்கு அப்பெயர் வந்தது] என்று படித்திருக்கிறோம். அப்போதெல்லாம் 'ஆகாசத் திலும் ரதம் செல்லக் கூடுமா?' வென்று ஸந்தேஹித்தோம். பிறகு நவீந காலத்தில் அது வாஸ்தவ மென்று புலப்பட வில்லையா? ஆகையால் 'நஹிஸ நெஹாதுலக்ஷணழ' என்கிற ந்யாயத்தால், நமது ஆசார்யர்கள் சொல்வதே சரண மென்றிருப்பது தான் ந்யாய்யம். அதுபோல் அர்ச்சையின் பெருமை யைச் சொல்லும் சாஸ்த்ரத்தை நாம் நம்ப வேண்டியதுதான் ந்யாய்யம்.

அப்படிப்பட்ட அர்ச்சை மூன்று வகைப்படும். அவை: ஸ்வயம் வ்யக்தம், ஸைத்தம், வைஷ்ணவம் என்பன. இவற்றுள், முதலிற் சொல்லிய ஸ்வயம் வ்யக்தம், ஸ்ரீரங்கம் ஸ்ரீமுஷ்ணம் முதலியவை. இரண்டாவதாகச் சொல்லப்பட்ட ஸைத்தம் என்பவை, ஆழ்வாராசார்யர் உகந்தருளிய திருமலை திருக்குடந்தை முதலியன. வைஷ்ணவம் அல்லது மாநுஷம் என்பவை, அர்வாசீநர்களின் மந்த்ர ப்ரதிஷ்டையால் எழுந்தருளப் பண்ணப்பட்டவை. எது மந்த்ர ப்ரதிஷ்டையால் ஏற்படுத்தப்பட் டிருக்கிறதோ, அதற்கு அந்த மந்த்ரங்களின் ஏற்றத் தாழ்வுகளால் ஸாந்நித்யத்தின் ஏற்றச் சுருக்கங்கள் ஏற்படலாம். ஆனால் முதலிற் கூறிய இரண்டும், பகவான் நம்மை உத்தீர்ணர்க ளாக்குவதற்கு நித்ய விபூதி யிலிருந்து தன் இச்சா ஸங்கல்பத்தால் இங்கு

எழுந்தருளியிருப்பதால், அப்படிக் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் எம்பெருமானுக்கு நாம் விசேஷ ஆராதநங்கள் செய்து, வேதபாராயணம் திவ்ய ப்ரபந்தம் முதலியவைகளை ஸேவித்து விசேஷமாகக் கொண்டாடுகிறோம். அப்படி யிருக்க, 'இந்த ஸந்நிதிகளில் நாம் வேத பாராயணம் செய்வதாலும் திருவாராதநம் செய்வதாலும்தான் பெருமாள் எழுந்தருளி யிருக்கிறார்' என்று நினைப்பது ஸரியா? இம்மாதிரியான க்ஷேத்ரங்களில், காலவிசேஷங்களில் சிற்சில ஸம்ஸ்காரங்கள் விதித்திருப்பது லோக ஸங்க்ரஹார்த்தமாக இருக்கலா மென்று தோன்றுகிறது.

தவிர: ஹரிஜநங்கள் ப்ரவேசித்து விட்டதால், இந்த க்ஷேத்ரங்களில் ஸாந்நித்யம் போய்விட்ட தென்று சொல்வதானால், தத்கால அர்ச்சகர்களில் சிலர் அநேகவித அசௌசிகளுடன் பெருமாளைத் தொட்டு ஆராதிக்க ஆரம்பித்த காலத்திலேயே பெருமாளுக்கு ஸாந்நித்யம் போயிருக்க வேண்டுமே. அப்படி யிருக்க, அதை இவ்வளவு காலம் பெருமாள் எப்படி க்ஷமித்திருக்க நேர்ந்தது?

ஆகையால் இந்த இடங்களில் அவன் இச்சா ஸங்கல்பத்தால் ஏற்பட்ட ஸாந்நித்யத்தை நாம் எவ்வித அசுசியாலேனும் போக்கடிக்க முடியுமா வென்பது தெரியவில்லை. எவ்விதத்திலும் அவன் இச்சா ஸங்கல்பத்துக்குமேல் நம் கார்யங்கள் போக முடியுமா?

மேலும், ஆலய ப்ரவேசம் என்பது, வைதிகர்களைக் கலந்து, சாஸ்த்ர விஷயம் எப்படி யென்று விசாரிக்காமல், நம் காங்க்ரெஸ் அரசாங்கத்தார் சில ராஜீய நோக்கத்துடன் ஹடமாகச் செய்த கார்யந்தான். மஹா பதிவ்ரதை யான ஒரு ஸ்த்ரீயை, சக்தியற்ற தன் பர்த்தா முதலியோர் பார்த்திருக்க, ஒரு அக்ரமசாலி ஆக்ரமித்து விட்டால், பிறகு அவனிட மிருந்து தப்பிவந்த அவளை அந்த ஆக்ரமிப்பி லிருந்து எப்படிக் குடும்பத்தில் சேர்த்துக்கொள்ளலாம்? அதற்கு சாஸ்த்ர ஸம்மதம் எந்த இடத்தி லிருக்கிற தென்று தேடி அதற்கு நிவ்ருத்தி தேடுவார்களே யொழிய அவளைக் கைவிட மாட்டார்கள். அப்படியே வைதிகர்களின் ஆக்ஷேபங்களை மறுத்து அரசாங்கத்தார் பலாத்காரமாகச் செய்திருக்கும் இந்தக் கார்யத்தால், நமக்குத் தொன்று தொட்டு உயிரைக் காட்டிலும் மேலானதாகத் தோன்றும் உயர்ந்த ஆலயங்களை நாம் துறந்து விடாமல், அதற்கு சாஸ்த்ரங்களில் நிவ்ருத்தி என்ன வென்பதையே தேட வேணும். இந்த இடத்தில் நம் கோயிலில் எழுந்தருளி யிருக்கும் பெருமாளே தம் உயிரிலும் மேலானதாகக் கருதி, அதற்கு ஏற்படும் குறைவு தமக்கு ஏற்பட்ட ஒரு கேதமாகக் கருதும் மிகவும் வயது வாய்ந்த கிழவிகளின் மநஸ் தத்ஸமயம் என்ன பாடு படு மென்பதைக் கவனிக்கவேண்டும்.

தவிர: பஞ்சமர்கள் சாஸ்த்ர விஹிதமான அளவுக்குக் கிட்ட வந்தாலும் விசேஷ ப்ராயச்சித்தம் விதித்திருக்கிறது. க்ராமங்களில முன் பெல்லாம் பஞ்சமர்கள், அக்ராஹாரத்தின் கோடியில் இருந்துகொண்டே தம் பணியைச் செய்துவருவது வழக்கம். பெரியோர்கள் எழுந்தருளியுள்ள வீதிகளில் தினம் பஞ்சமர்கள் இப்போது ஸர்வ ஸாமாந்யமாக ஸஞ்சரிக்கத் தொடங்கிவிட்ட

காரணத்துக்காக யாரும் ஷெ வீதிகளிலுள்ள திருமாளிகைகளை த்யாஜ்யம் பண்ணி விடுகிறார்களா? இல்லையே. அதே தீண்டாதார்எம்பெருமான் ஸந்நிதியில் வந்து விட்டால், அதற்காக ஷெ கோயில்களைப் பஹிஷ்கரிப்பது மட்டில் உசிதமா வென்பது அடியேனுக்குப் புரியவில்லை. தீண்டாதார் கோயில்களில் ப்ரவேசிப்பது அக்ரமம்தான். ஆபத் வந்துவிட்டால் அதற்கு நிவ்ருத்தி தேட வேணுமே யொழிய, தாமும் கோயில்களைப் பஹிஷ்கரித்து மற்றவர்களையும் பஹிஷ்கரிக்கச் செய்வது உசிதமாவென்பது தெரியவில்லை. பாமர ஜநங்களைக் கோயிலுக்குப் போகாமல் அவர்களைப் பஹிஷ்கரிக்கும்படி ஓயாமல் உபதேசிப்பது தப்பிதம். ஏனெனில் : இவர்களுடைய பஹிஷ்காரோபதேசத்தால், அவர்களுக்கு விக்ரஹாராதநத்தில் நம்பிக்கையற்றுப் போவதுடன், விக்ரஹத்தில் ஒருவித த்வேஷமும் ஔதாஸீந்யமும் தோன்றி, ஒருக்கால் ம்லேச்சர் சொல்லும் மார்க்கத்தில் நம்பிக்கை வந்தாலும் வரலாம்.

ஆகவே : வைதிகர்களான நாம் எல்லோரும் ஒன்றுகூடி நம் மதத்துக்கே வ்யாதி போலத் தோன்றியிருக்கும் இந்த ஆலய ப்ரவேசத்திற்குத் தகுந்த ஔஷதங்களை சாஸ்த்ர மூலம் கண்டு பிடித்து, உலகம் போற்றும் தேவாலயங்களை ஸம்ரக்ஷித்து, அதன் மூலம், மேனாட்டவர்களும் போற்றிக் கொண்டாடுகின்ற இந்த ஸநாதநமான ஹிந்து மதத்தையும் ஸம்ரக்ஷிக்கவேணுமாய் ப்ரார்த்திக்கிறேன்.

தஞ்சை ஸ்ரீ வைஷ்ணவ ஸபை

தஞ்சை ஸ்ரீ வைஷ்ணவ ஸபையில் சென்ற ஆவணிமீ 17உ முதல் (2-9-47) தொடர்ச்சியாக ஆறு நாட்கள், ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்தாந வித்வான் ஸ்ரீ. உப. புத்தங் கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியினுடைய மஹத்தான உபந்யாஸங்கள் நடைபெற்றன. தஞ்சையிலுள்ள ஸ்ரீ வைஷ்ணவர்களும், சுற்றுப் புற க்ராமங்களிலுள்ள அநேக ஸ்ரீ வைஷ்ணவர்களும், ஸதஸ்ஸுக்கு எழுந்தருளியிருந்து ஸ்ரீ ஸ்வாமியின் உபந்யாஸங்களைக் கேட்டு ஆநந்த பரவச மடைந்தார்கள்.

உபந்யாஸங்களின் விவரம்.

2--9--47 '[illegible]'
3--9--47 ஜீவாத்ம – பரமாத்மாக்களின் பரஸ்பர ஸம்பந்தம்
4--9--47 ஜீவ கர்த்ருத்வம்
5--9--47 ஷெ
6--9--47 அந்தர்யாமி தத்வமும் உபநிஷத்துக்களும்
7--9--47 மோக்ஷம் –ஸ்வரூபமும் ஸித்தியும்.

மிகவும் அரிய பெரிய இவ்விஷயங்களை ஸ்வாமி எல்லார்க்கும் எளிதில் புரியும்படியும், சொல்ல வேண்டிய விஷயங்களைக் கொஞ்சமேனும் விடாமலும், ஸம்சய விபர்யயங்கள் தீரும்படியும், வித்வான்களும் கொண்டாடும்படியும் உபந்யஸித்தது அத்யாச்சர்யமாயிருந்தது. இப்படிப் பிறர் நலத்தையே கருதி விஷய ப்ரதாநம் செய்த ஸ்ரீ ஸ்வாமிக்கு அடியோங்கள் எந்நாளும் கடமைப் பட்டிருக்கிறோம்.

K. S. நரஸிம்ஹையங்கார் B.A., B.L.,
கார்யதர்சி.

ஸ்ரீயை நம:

நமது ஸ்திதி.

ஸ்ரீ. உப. திருவரங்கம் திருமலை தாதாசார்யர், M.O.L., S.V.O. R. Institute, திருப்பதி

உலகம் இப்போது இருக்கும் நிலையைப்பற்றிச் சிறிது சிந்தித்துப் பார்ப்பவர்கள் கவலையற்று நிர்வ்ருதர்களாய் இருக்க முடியாது. நாளடைவில் யாருக்கு என்ன நேருமோ என்ற பயம் வ்ருத்தியாகிக்கொண்டே யிருக்கிறது. விவேகம் நிறையப்பெற்ற பெரியோர்கள் முன் ஜாக்ரதையாகச் செய்ய வேண்டியதைச் செய்து வரக்கூடிய அபாயத்தைத் தடுத்து நம்மைக் காப்பாற்ற முற்படவேண்டும். 'நம்மை' யென்று ஒரு சிறு ஸமுதாயத்தைக் கருதிச் சொன்னதல்ல. மனிதவர்க்கமே இப்போது மிகவும் கேவலமான நிலையிலிருக்கின்றது. அது, நாதனற்ற நிலையிலிருந்து தபித்துக் கொண்டிருக்கிறது. ஒவ்வொருவரும் வெவ்வேறு லக்ஷ்யம் வைத்துக்கொண்டு பல விதமாகப் பேசியும் அநுஷ்டித்தும் வருகிறார்கள். எல்லாம் குழப்பமாக இருக்கிறது. இன்னும் பல மஹா யுத்தங்கள் ஏற்படலாம். இன்னும் பலமான மதச் சண்டைகளும் வகுப்புச் சண்டைகளும் உண்டாகலாம்.

இவைகளையெல்லாம் அறியாதவர் ஒருவர் இப்போது இருக்க முடியாது. ஆயினும் இப்போதே பெருமுயற்சி செய்து தடுக்காவிடில் ஸர்வ ஜனங்களுக்கும் அதிகோரமான பேராபத்து உண்டாகும். இந்தப் பயங்கர நிலையை உள்ளபடி ஊன்றி யுணர்ந்தவர்கள் பலர் இருக்கின்றனரா என்பதில் நமக்கு ஸந்தேஹமே இருக்கின்றது.

'யதெஷா ரக்ஷதி ரக்ஷித:' என்றபடி பூர்வம் இருந்தது. 'யதஷவ ஹதொ ஹந்தி' என்றது இப்போது நடந்துகொண் டிருக்கிறது. சாஸ்த்ர ஸித்தமான தர்மம் க்ஷீணித்து வருவதும், இதற்கு முன் கண்டும் கேட்டு மிராத மஹாநர்த்தங்கள் உண்டாய்க்கொண்டிருப்பதும், நமக்கு நிஸ்ஸந்தேஹ ப்ரத்யக்ஷ விஷயமா யிருக்கின்றது. ஆகையால் சாஸ்த்ர விச்வாஸ முள்ளவர்கள் இவ் வநர்த்தங்களுக்குப் பரிஹாரந் தேடவேண்டுமானால், மறுபடியும் தர்ம மார்க்கத்தையே ப்ரதிஷ்டாபநம் பண்ண முற்பட வேண்டும்.

உண்மையில் 'இது நன்மை, இது தீமை' என்று உலகத்திற்குச் சொல்லவேண்டிய அதிகாரிகளே ஸாமாந்ய ஜநங்கள்போல் கேவல உதரம்பரிகளாய் அலைந்தால், உலகத்தில் விவேக வார்த்தையு மிருக்க வழியில்லை. யஜ்ஞாத்யநுஷ்டாநம் சிரகாலமாகவே லுப்தம். ச்ரத்தையுடனும் பயத்துடனும் செய்து வந்த ஸந்த்யாவந்தநம் ச்ராத்தம் முதலியன இப்போது விடப்பட்டன; விடப்பட்டு வருகின்றன. சிகையில்லை; யஜ்ஞோபவீதமும் இல்லாதது போன்றதே. புண்ட்ரத்திற்கோ அத்யந்த லோபம்; போஜந வ்யவஸ்தைகளெல்லாம் மறைந்து போய்விட்டன. எச்சில் செய்யக்கூடா தென்பதே நம் சிறுவர்களுக்குத் தெரியாது. வஸ்த்ரதாரணம் தேசாந்தரத்து ஜநங்கள்போலவே.

இப்படி நம்மவர்களின் ஸ்வரூபமே அழிந்து விட்டது. குலாசாரங்களுக்கு ப்ரஸக்தி எங்கே ?

" யதேஹ க்ஷுதிதா பாலா மாதரம் பர்யுபாஸதே ।
ஏவம் ஸர்வாணி பூதாநி அக்நிஹோத்ரமுபாஸதே ॥ "

என்றபடி பரம ப்ரஹ்மவித்துக்கள் அக்நிஹோத்ராத்யநுஷ்டாந முகத்தால் உலகத்தை ஸர்வ விதத்திலும் காப்பாற்றக் கடமைப்பட்டவர்கள். இப்போது காணப்படுகிறவர்களின் பெரும்பாலார் தீபஸ்தம்பங்களில் ஏறிக் கம்பிகளைப் பல்லால் கடித்துச் சீர்திருத்தி வேலை செய்வதும், நாக்கில் விரலை வைத்து ஈரமாக்கி ஏடுகளைத் திருப்பி உத்யோகம் செய்வதுமாக ச்வ வ்ருத்தியை அவலம்பித்து வயிறு வளர்க்கிறார்கள். இவர்களன்றோ தாழ்ந்த வகுப்புக்களில் கடையில் இருப்பவர்கள் ? இந்தப் பரிதாப நிலைமையை உலகம் உணராமலி ருப்பதும், அதனாலேயே புநருத்தாரத்திற்கு முயலாமல் இருப்பதும் அத்யந்தம் சோசநீயம்.

சாஸ்த்ரஜ்ஞ குலங்களில் ஜநித்தவர்களும், அதில் விச்வாஸ முள்ளவர்களு மான நம்மைத் தவிர வேறு யார், ஸர்வ ஜநங்களும் உண்மையை உணருமாறும், ஸுகமாக ஜீவநத்தை நடத்துமாறும், உபதேசங்களாலும் அநுஷ்டாநங்களாலும் போதிக்கக்கூடும் ? இன்னும் சில வருஷங்கள் இப்படியே சென்றால், பிறகு புநருத்தாரணத்திற்கு ப்ரத்யாசையே இராதென்பது நிச்சயம்.

ஆகையால், ஆஸ்திகர்களாயும் ஆட்யர்களாயு முள்ள நமது பெரியோர்க ளிடம் அடியேன் ஸாஞ்ஜலி பந்தத்துடன் ஒரு விண்ணப்பம் செய்யத் துணிந்தேன். ஜ்ஞாநம் அநுஷ்டாநம் சாந்தி லோகோபகார சிந்தை இவை உண்டாகப்பெற்ற மஹான்களைப் பொறுக்கி யெடுத்து, அவர்களுடைய தேஹ யாத்ரா விஷயத்தில் அவர்களுக்குச் சிந்தையில்லாமல் செய்து, க்ராமங்களிலும் நகரங்களிலும் அவர்களை வஸிக்கச் செய்து, லேகந ப்ரவசநாநுஷ்டாநங்களால் ஸர்வ ஜநங்களுக்கும் ஸத்யம் அஹிம்ஸை பகவத்பக்தி பரஸ்பர ஸ்நேஹம் காருண் யம் இத்யாதி நல்ல குணங்கள் உண்டாகும்படி செய்யவேணும். வேதாத் யயநம் சாஸ்த்ர பரிசயம் பகவதாராதநம் ஔபாஸந வைச்வதேவங்கள் என்ற இவற்றால் சிறந்த பெரியோர் எத்தனை பெயர்கள் உலகத்தில் இருப்பரோ அத்தனை க்ஷேமம் உலகத்திற்கு உண்டு. இவ்விதப் பெரியோர் உலகில் பலர் தோன்றும்படி நாம் செய்யவேண்டும். இப்போது இருக்கும் மஹான்களை ஆதரித்தால், அவர்களைப் பின்பற்றிப் பதின்மடங்காக அவர்களைப் போன்றவர் கள் தோன்றுவர். உத்யோக மோஹம் தீரும்படியும், நகரங்களுக்கு வந்து ஸ்வ ரூபம் கெடாமல் அக்ரஹாரங்களிலேயே வஸிக்கும்படியும், ஸ்வவித்யையிலும் ஸ்வ தர்மங்களிலும் ருசி உண்டாகும்படியும், நம் ஸ்வரூபத்தைக் காப் பாற்றுவது மாத்ர மல்லாமல் நம்மைச் சுற்றியும் நாட்டிலும் உள்ள ஜநங்கள் அனைவரும் விவேகம் பெற்று ஒழுங்கான முறையில் ஜீவிக்க வேண்டு மென்ற நோக்க முண்டாகும்படியும், அதற்குத் தக்கபடி புராணாதி ப்ரவசநம் நடத்தும் படியும் அதிகாரி விசேஷங்களை உண்டாக்கி இருப்பவர்களைப் பொறுக்கி யெடுத்து உத்ஸாஹப் படுத்தவேணும். இது எமது கோரிக்கை.

ஸ்ரீ:

ஸ்ரீமான் வி. பாஷ்யமையங்காருடைய வ்யாஸத்திற்கு விடையளிப்பு.

[காஞ்சீ. ஸ்ரீ. உப. வித்வான் ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரிய ஸ்வாமி]

நிகழும் புரட்டாசி மாதத்தில் வெளிவந்த ந்ருஸிம்ஹ ப்ரியாவில் 'தேவாலயங்கள்' என மகுடமிட்டு ஸ்ரீமான். வி. பாஷ்ய மையங்கா ரவர்கள் எழுதி வெளியிட்டுள்ள வ்யாஸத்திற்கும் பதில் தெரிவிக்கிறோம். ஷை வியாஸத்தின் முடிவில் அவர் "விஜ்ஞாப்யங்கள் இன்னும் வயிற்றுள; விஸ்தர பயத்தால் விரமிக்கிறேன்" என்று எழுதி யிருக்கிறார். வயிற்றி லுள்ளவற்றை யெல்லாம் விரிவுக்கு அஞ்சாமல் விஜ்ஞாபிப்பதில் என்ன தடை? இப்படிப்பட்ட ஸமயத்திலும் வெளியிடாமல் வேறெப்போது வெளியிடுவது? இவரை யுத்தேசித்தே நாம் மிக விரிவாக வெளியிட்டிருக்கிற இரண்டு அத்யாயங்களுக்கும் இவர் விரிவாக விடை யிறுக்கவும் கடமைப்பட்டிருக்கிறார். இந்த நிலைமையிலும் விரிவுக்கு அஞ்சி விரமிக்கிறதாகச் சொன்னால் இதற்கு அர்த்த மென்னே? விரிவுக்கு அஞ்சுவானேன்? விரிவான வ்யாஸங்களைப் பத்ரிகைகளில் ஏற்றுக் கொள்ளமாட்டோ மென்கிறார்களா? என்றாலும், தனிப்புத்தகமாக அச்சிட்டு ப்ரசாரஞ் செய்ய உபபத்தி யில்லாதவரோ இவர்! அரிஜன முன்னேற்றச் சங்க நிதிகளி லிருந்து ஏராளமான உதவிகளையும் பெற முடியுமே. ஆகவே அபரிமிதமான விஷயங்கள் வயிற்றுக்குள் இருப்பதாகவும், விரிவுக்கு அஞ்சிச் சுருக்கமாக வெளியிட்டதாகவும் எழுதுவது பொருளற்றதென்று அறியத்தக்கது. விரிவாக அவற்றை எவ்வளவு இவர் எழுதினாலும், அது இரண்டு வார்த்தைகளில் பங்கமடையக் கூடியதே யென்பதும் உணரத்தக்கது.

இனி, இவர் எழுதி யுள்ளவரையில் இவரது விஷயம் எவ்வளவு பொருத்தமானதென்பதை ஆராய்வோம். இவர், விஷயங்களை இரண்டாகப் பிரித்துக்கொண்டு எழுதியுள்ளார். அரி ஜனங்களின் ஜாதியைப்பற்றியது முதல் விஷயமாம். அவர்களின் ப்ரவேசத்தினால் கோவில்களில் அர்ச்சா மூர்த்திகளின் சக்தி போய்விடுமா வென்பது இரண்டாம் விஷயமாம். இவ்விரண்டு விஷயங்களிலும் இவர் எழுதி யிருப்பது முற்றிலும் தவறு என்பதை விளக்கமாக நிரூபிக்கிறேன்.

பஞ்சம ஜாதி யென்று ஒரு ஜாதியே கிடையா தென்றும், அரி ஜனங்கள் சண்டாள ஜாதியைச் சேர்ந்தவர்க ளல்ல ரென்றும், அவர்கள் அனேக வெவ்வேறு ஸமூஹங்களா யிருப்பதைத் தாம் தெரிந்துகொண்டிருப்பதாகவும் இவ்வளவே இவர் முதல் விஷயத்தில் எழுதியுள்ளார். இதில் வீண் விரிவு செய்வது அவசிய மற்றது. அவர்களை எந்த ஜாதியாகவாவது இவர் தீர்மானிக்கட்டும். இது வரையில் தீண்டா வகுப்பினராக வழங்கப்பட்டும், அநாதிகாலமாக ஊர்களுக்கு வெளிப்பட்டு ஒதுங்கியும் இருந்து வருகின்றவர்களே அரி ஜனங்களாகக் கூறப்பட்டு வருகிறார்களென்பதில் விவாத மில்லை யன்றோ? ப்ராஹ்மணாதி ஜாதிகளிலும் அனேக வெவ்வேறு ஸமூஹங்கள் இருப்பன போல, இவர்களுக்குள்ளும் அவை இருக்கட்டுமே. அதனாலென்ன? மேல்கோட்டை யென்கிற திருநாராயணபுரத்தில் ஆயிரம் வருஷங்களுக்கு முன்பு ஸ்ரீராமாநுஜர் செய்துவைத்ததாகச் சொல்லப்பட்டும் நாளைக்கும் காணப்பட்டும் வருகிற நடவடிக்கையி லிருந்தும் இவ்வகுப்பினர் அநாதியாகத் தீண்டாதவர்களாய்த் தாமே ஒதுங்கி யிருப்பவர்க ளென்பது மறுக்கவும் மறைக்கவும் முடியாத விஷயமன்றோ? அவர்கள் ப்ராஹ்மணாதி நான்கு வருணங்களில் சேர்ந்தவர்களே யென்றுகூட இவர் சொல்லட்டும். அதில் நாம் விவாதப்பட வரவில்லை. அவர்களுடைய ப்ரத்யக்ஷமான தன்மை எதுவோ அதுவன்றோ நமக்கு விஷயம். அந்தத் தன்மை தமிழில் தீண்டாமை யென்றும், வடமொழியில் அஸ்ப்ருச்யத்வ மென்றும், ஆங்கிலத்தில் *Untouchability* என்றும், இப்படி ஒவ்வொரு பாஷையிலும் ஒவ்வொரு பெயரால் வழங்கப்பட்டு வந்து கொண்டிருப்பதால் இதை இல்லை செய்ய முடியாது.

ஆகமங்களில் ‘சண்டாள’ என்கிற சொல்மாத்திரமே யில்லை; ‘புல்கஸ’ இத்யாதி பதங்களும், பொதுவாக ‘அஸ்ப்ருச்யா:’ என்கிற பதங்களும் ஒவ்வொரு ஸம்ஹிதை யிலும் உபயோகப்படுத்தப்பட் டிருக்கின்றன. அவர்கள் த்வஜஸ்தம்பம் வரையில் வந்துவிட்டாலும் சட்டிபானைகளை யெல்லாம் எடுத்து வீசி யெறிந்து சாந்தி ஹோமம் முதலியன நடத்தப்பட வேணு மென்று வ்யக்தமாகச் சொல்லப்பட் டிருப்பதனால் அவற் றுக்கு மாறாக இவர் எழுதி யிருப்பது தவறு.

இவ்வரி ஜனங்கள் தீண்டா வகுப்பின ரல்லர் என்னில், பின்னைத் தீண்டா வகுப் பினர் என்று சொல்லப்படுவோர் யாவர் என்று கேள்வி பிறந்தே தீரும். அவ்வகுப்பினரை ப்ரத்யக்ஷ ப்ரமாணத்திற்கு விரோத மின்றியிலும் அநாதி வழக்கத்திற்கு முரண்படாம லும் இவர் காட்டியே தீரவேண்டும். அதைக் காட்டாது ‘இவர்கள் சண்டாளர்க ளல்லர்’ என்றும் ‘பஞ்சம சப்தம் அநிஷ்டபங்நம்’ என்றும் இவ ரெழுதிவருவதில் பயனுண்டோ? கடல் சூழ்ந்த மண்ணுலகமும் சந்த்ர ஸூர்யர்களும் ஏற்பட்டது முதலாக இதுகாறும் கோவில்கள் இன்ன விடத்தி லிருக்கின்றன வென்று கூட அறியாதிருந்தவர்களும், நம்மைக் கண்டு தாமே விலகிக் கொண்டிருப்பவர்களும் யாரோ, அவர்களைப் பற்றியதே முதல் விஷயம். அவர்களுடைய ஜாதி எதுவாயிருந்தாலு மிருக்கட்டும். அது விஷய மன்று என்று முடிந்தது.

இனி இரண்டாவது விஷயத்தைப் பற்றிப் பேசுவோம். இதைப்பற்றி இவரெழுது கையில், முதற் பாரா இங்ஙனேயுள்ளது:—“அரி ஜனங்கள் சாஸ்த்ரோக்த சண்டாள ஜாதியர்க ளல்லாவிடில் அவர்களுடைய ப்ரவேசத்தால் அர்ச்சாமூர்த்திகள் தைவஸாந் நித்யத்தை இழந்துவிட்டனவாகக் கருதக் காரணமில்லை” என்று. இந்தப் பாராவை விவேகிகள் ஊன்றி வாசிக்கவேணும். இதனால் இரண்டு விஷயங்கள் திண்ணமாக ஏற் பட்டே தீரும். அவை எவை யென்னில்:—கோவிலுக்குள் ப்ரவேசிக்கத் தகாதவர்க ளென்று சாஸ்த்ரங்களினால் மறுக்கப்பட்ட வகுப்பினர் உண்மையில் உண்டு என்பதும், அப்படிப்பட்டவர் ப்ரவேசித்தால் அர்ச்சாமூர்த்திகள் தைவ ஸாந்நித்யத்தை இழந்து விடக்கூடும் என்பதும். இதனால் இவருடைய ஆஸ்திக்யம் ஒருவாறு வெளியாகிறது. அது நிற்க: இப்போது ஆங்காங்கு ஆலயங்களில் ப்ரவேசித்தவர்கள் சாஸ்த்ரங்களில் மறுக்கப்பட்டவர்க ளல்ல ரென்றும், ஆகவே இவர்கள் புகுந்ததனால் தைவ ஸாந்நித்யத் திற்கு ஹாநி வாரா தென்றும் இவருடைய வாதம் முடிந்து நிற்கிறது. மறுபடியும் தெரி விக்கிறேன். சாஸ்த்ரங்களில் ஆலய ப்ரவேச அநதிகாரிகளென்று மறுக்கப்பட்ட வகுப் பினர்கள் வேறு சிலர் இருப்பதாகவும், அவர்கள் வந்து புகுந்தால்தான் தைவஸாந்நித் யம் போய்விடும் என்றும் இவருடைய அபிப்ராயம் வெட்ட வெளிச்சமாகிற தென் பதை மறக்கவேண்டா. சாஸ்த்ரங்களில் மறுக்கப்பட்டவர்களே இப்போது ஆலயங் களிற் புகுந்தவர்கள் என்று தேறிவிடுமானால், அப்போது தைவஸாந்நித்யம் போய்விட்ட தென்பதும் தேறினதாக இவராலேயே ஒப்புக்கொள்ளப்பட்டதாக முடிந்தது.

கேண்மின். சாஸ்த்ரங்களில் லக்ஷக்கணக்கான சொற்கள் உள்ளன. இன்ன சொல்லுக்கு இன்னது அர்த்தமென்பதை “சக்திக்ரஹம் வ்யாகரணோபமாந கோசாப்த வாக்யாத் வ்யவஹாரதச் ச” என்கிறபடி பல வழிகளால் அறிகிறோம். இவற்றுள் பெரும் பான்மையான லோகவ்யவஹாரமே ப்ரதாநமாக முடிந்து நிற்பது. கதளீ என்று ஒரு சொல். இதற்கு வாழை யென்று பொருள் என்கிறோம் ஆனால் ஒரு வாழை மரத் தில் கூட கதளீ என்கிற பெயர் நமக்குப் புலப்படவில்லை அநாதி வ்யவஹாரத்தைக் கொண்டே நாம் வழங்கிவருகிறோம். ஜாதிகளிலோ வ்யக்திகளிலோ எதிலும் இதே ந்யாயம் ஒக்கும். ஒருவர் தம்மை ப்ராஹ்மணரென்று சொல்லிக்கொள்வதும், இன்ன கோத்ரம் இன்ன ஸூத்ர மென்று சொல்லிக் கொள்வதும், இன்ன பெயருடைய வராகச் சொல்லிக் கொள்வது இதெல்லாம் நிகழ்ந்து வருகிற வ்யவஹாரத்தை யொட்

29239

ஶக்ஷம் வெஹவ தீஉயெ்ரு ஹஷிஸெஶெ அ ஓரஶஹெதெ ।
உவாயஷஞஹாவெ ந ஸேயம் வர்க்ஷம் வஶம் உஹ: ॥ 1.

'இப்படிப் பக்திஸாரரென்னும் திருநாமமுடைய திருமழிசை யாழ்வார் செய்த ப்ரார்த்தனையைத் தலைக்கட்டி வைத்ததால் மாத்ரம் இந்த எம்பெருமானுக்கு 'யஶொக்த காரீ' என்னும் திருநாமம் வழங்கி வருகின்ற தென்பதில்லை; அவன் ப்ரஹ்மாவின் யாகத்தை ஸம்ரக்ஷிப்பதற்காக வேகவதீ நதியை நிரோதம் செய்துகொண்டு அவ்விடத்தில் படுத்துக் கிடக்கிறுன் என்னும் காரணத்தாலும் அவனுக்கு இத்திருநாமம் வழங்குகின்றது என்பது இந்த ஸ்தோத்ரத்திலிருந்து ஏற்படுகின்ற தென்றும் சொல்லலாம்.

" அ த-ஶா ந ந ஸ்வ த ஜ-ஶ ஹொவ த
ஸரி தம் வெஹவ தீஉஸள நிர-ஶஞ்நு ।
ஹஹவாநு ஹக்ஷஉதாம் யஶொக்தகாரீ ॥ "

[நான்முகனுடைய வார்த்தையைக் கேட்டு வேகவதீ நதியை நிரோதம் பண்ணி, அந்த நான்முகனுடைய யஜ்ஞத்தை ஸம்ரக்ஷித்தா ரன்றே இந்த யதோக்தகாரீ?] இத்யாதிகள் இப்படிச் சொல்வதற்கு நிபந்தநம்.

1. ஆச்ரிதர்களின் விஷயத்தில் 'உபாயமும் பகவான்; பலமும் பகவான்' என்பது நமது ஸித்தாந்தம் அதாவது: அவனே ப்ராபகன் [அடைவிக்கிறவன்], அவனே ப்ராப்யன் [அடையப்படுகிறவன்] என்று சொன்னதாயிற்று. லோகத்தில் உபாயம் வேறாகவும் பலம் வேறாகவும் காணப்படுகின்றனவே யொழிய, இரண்டு மொன்றாகக் காணப்படவில்லை. யாகத்தில் ஸ்வர்க்கம் முதலானவை ப்ராப்யம் [பலம்]; அதைக் காட்டிலும் வேறுபட்டிருக்கிற யாகமாகிற கர்மம் ப்ராபகம் [உபாயம்]; அப்படியன்று ப்ரக்ருத விஷயத்தில். 'ஶாமெகம் ஶரணம் வ்ரஜ' என்னும் சரம ச்லோக வாக்யத்திற்கு 'அவனே ப்ராப்யன். அவனே ப்ராபகன் என்று அநுஸந்தாநம் செய்' என்பதே பொருளென்று ஸ்ரீ பாஷ்யகாரர் அநுக்ரஹிக்கிருக்கிறார். [ஶாமெகமெவ கதஶாஶம் ஶூராயூம் வூாவூம் உவாயம் ஆ ந-ஶஸ்ஷக' என்பது அந்தத் திவ்ய ஸூக்தி. கேவலம் ப்ராப்யமும் ப்ராபகமும் மாத்ரம் அவன் என்பதில்லை; அவனே கர்த்தா, அவனே உபாஸிக்கப்படுகிறவன், என்பது ஸ்ரீ பாஷ்யகாரருடைய திருவுள்ளம்'.] இந்த ஐக்யமே இந்த ச்லோகத்தின் விஷயம்.

சதுர்முக ப்ரஹ்மா ஒரு காலத்தில் பகவானைத் தர்ஶிக்க விரும்பி அச்வமேத யாகம் என்னும் ஒரு கர்மாவைச் செய்ய ஆரம்பித்தார். அதற்கு அநேக விக்நங்கள் ஏற்பட்டன. அவைகளை நிவர்த்திக்க அஶக்தராய், அவர் பகவானை ஶரண மடைந்தார். 'எனது இஷ்டத்தை ஸாதித்துக்கொள்ள எனக்கு ஶக்தியில்லை; என்னால் உத்தேசிக்கப்பட்ட யாகமாகிற கர்மமும் விக்நிதமாகிறது; எனக்கு உபாய ஸ்தாநத்திலிருந்து என்னுடைய இஷ்டத்தை ஸாதித்துக் கொடுக்கவேண்டும்' என்று ப்ரார்த்தித்தார். ஸ்ரீ பகவான் அதற்கு இணங்கி, வேகவதீ நதியின் மத்யத்தில் யதோக்தகாரியாக அவதரித்து யாக விக்நங்களை நிவர்த்தித்து [அதாவது: உபாய ஸ்தாநத்திலிருந்து] பிறகு ஹஸ்தி கிரியில் ஸ்ரீ தேவாதிராஜனை ஆவிர்ப்பவித்தான் [அதாவது: பலமாகவும் ஆனான்]. இவ்விடத்தில் திவ்யமங்கள விக்ரஹங்கள் இரண்டே யொழிய ஸ்வரூபம் ஒன்றே யாகையால், ஒரு தேஜஸ்ஸே இரண்டாக ஆவிர்ப்பவித்தது என்று ஐக்யம் பேசப்படுகிறது.

[illegible] ।
[illegible] ॥ 2.

இந்த ச்லோகத்தில் மற்று மொரு விதமாகச் சிலர் நிர்வாஹம் செய்வார்கள். 'இப்படி ஒருவனே ப்ராப்யனுகவும் ப்ராபகனுகவும் இருக்கிரு னென்னும் அர்த்தம் ஶாஸ்த்ரஜ்ஞர்களே அறியக் கூடும்; அது எல்லாருக்கும் ப்ரத்யக்ஷமாகத் தெரியவேண்டு மென்றே ஸ்ரீ பகவான் திருவெஃகாவில் யதோக்தகாரி ரூபேண உபாயமாகவும், மலே யின் மீது தேவாதிராஜ ரூபேண பலமாகவும் திருவவதரித்திருக்கிருனே' என்பது தான் அந்தப் பொருள். ப்ரபத்தி யோகத்தின் ரஹஸ்யமும் இதுவே. நாம் மோக்ஷத்தை விரும்பி, அதற்கு உபாயமாக விதிக்கப்பட்டுள்ள பக்தியோகத்தைச் செய்ய ஸாமர்த்ய மற்றவர்களா யிருப்பதை உணர்ந்து, 'அந்த உபாய ஸ்தாநத்தில் நீ யிருந்து எங்களு டைய இஷ்டத்தை ஸாதித்துக் கொடுக்கவேண்டும்' என்று பகவானிடம் ஶரண மடை யும் பக்ஷத்தில், அவன் தானே பக்தி யோக ஸ்தாநத்தில் நின்று நம்முடைய இஷ்டத்தை ஸாதித்துக் கொடுப்பான் என்பது தான் அந்த ரஹஸ்யம்.

[ப—ரை] ஸ்வயம் வ்யக்தம்- [கர்மம் முதலிய ஹேதுக்க ளின்றிக்கே] ஸ்வேச்சா மாத்ரத்தாலே ஆவிர்ப்பூதமாயும், வரம்- [மற்றை எல்லாவற்றைக் காட்டிலும்] உத்க்ருஷ்டமாயு மிருக்கும், ஏகம் மஹ:- ஒன்றுகவே யிருக்கும் தேஜோமயமான வஸ்துவானது, வேகவதீ மத்யே- வேகவதீ நதியின் நடுவிலும் [யதோக்தகாரி ரூபமா கவும்], ஹஸ்திஶைலே ச- ஹஸ்திகிரியின் சிகரத்திலும் [தேவாதிராஜ ரூபமாக வும்], உபாயஸாத்யபாவேந- உபாயமாகவும் பலமாகவும், த்ருஶ்யதே- காணப் படுகிறது.

உபாய ஸாத்யபாவேந- இதை யதா ஸங்க்யமாக, 'வேகவதீ மத்யே உபாய பாவேந, ஹஸ்திஶைலே ஸாத்யபாவேந' என்று பிரித்து முறையே பொருள் கொள்ளவேண்டும். 'உபாய பாவேந' என்பதற்கு, 'உபாயமாக இருக்கும் தன்மை' என்று பொருள் கொள்வதைக் காட்டிலும், 'உபாயாந்தர ஸ்தாநத்திலிருக்கும் ஸ்வ பாவம்' என்று பொருள் கொள்வது உசிதமாகும் ஏனெனில்: அடுத்த ச்லோகத்தில், உபாயமாக இருக்கும் தன்மை பேசப்படுகிறது.

த்ருஶ்யதே—'ஸகல மனிதர்களுடைய கண்களுக்கும் விளங்கும்படி கிடக்கிருன்' என்பது கருத்து. இதனுல் அவனுடைய ஸௌலப்யம் சொல்லப்பட்டது.

வரம்— கேவலம் ஸுலபனுக மாத்ரம் இருப்பது போதாதாகையால், அவன் மிகவும் உத்க்ருஷ்டனுகவு மிருக்கிருன் என்று அவனுடைய பரத்வமும் சொல்லப்படுகின் றது. இரண்டும் இருப்பதன்றோ நாம் ஆச்ரயிப்பதற்கு ஹேதுவாகும்?

2. ஆச்ரிதர்கள், 'நீர் எங்களால் ஸாதிக்கக் கூடாததான உபாயாந்தர ஸ்தாநத் தில் நிற்பது மாத்ரம் போதாது; அந்த உபாயமாக இருந்து எங்களை அக்கரைக்குக் கொண்டுபோய் விடவும் வேண்டும்' என்று ப்ரார்த்தித்தால் அப்படியே அவன் ஸமயிதா வாகவும் [வழி நடாத்திக்கிறவனுகவும்] ஆகிருனென்பது இந்த ச்லோகத்தால் விளக்கப் படுகிறது. ப்ரக்ருதி மண்டலத்தில் இருக்கும் காலத்தில் மாயாந்வயத்தைப் போக்கி மத்ய தமநி த்வாரத்தை ப்ரகாஶிப்பித்து, அதில் ப்ரவேசிப்பித்து, பிறகு அர்ச்சிராதி மார்க்கத் தில் அர்ச்சிராதி கணங்களை நியமிப்பதுடன், கூடத் தானும் ப்ரதாநனுக நின்று, பர்யங்க

வழி நடத்திவைப்பதால் அவனை 'ஶமயிதா' வென்று சொல்ல ஆக்ஷேப ர! இதைத் தான் ப்ராபகத்வ மென்று சொல்வார்கள். இந்த ப்ராபகத்வத்தை இந்த ச்லோகத்தால் விளக்குகிறார்.

இந்த ச்லோகத்தில் 'ச்லேஷன்' என்று சொல்லப்படும் ஶப்தாலங்காரத்தை அவலம்பித்து ஒரு த்ருஷ்டாந்தம் சொல்லப்படுகிறது: ஒரு நதியில் அக்கரைக்குப் போவதை உத்தேஶித்து, த்ருடமாகக் கட்டப்பட்டிருக்கும் ஓர் அணையானது ஜனங்களை எவ்வித ஆபத்து மின்றிக்கே அக்கரைக்குக் கொண்டுபோய் விடுவதற்கு ஸுலபமான மார்க்கமாகிறது என்பது அந்தத்ருஷ்டாந்தம். அப்படியே ஸ்ரீ பகவானும் ஒரு த்ருடமான அணையாக விருந்துகொண்டு எவ்வித ஆபத்து மின்றிக்கே ஆச்ரிதர்களை அக்கரைக்குக்கொண்டு போய் விடுவதற்கு ஶக்தனாகிறான் என்பது தார்ஷ்டாந்திகம். த்ருஷ்டாந்தத்தில் வேகவதி நதியில் குறுக்காக ஶயனித்திருக்கும் ஸ்ரீ யதோக்தகாரி அணை; தார்ஷ்டாந்திகத்தில் ஸம்ஸாரமாகிற ஸமுத்ரத்தில் பெரியதொரு ஸேதுவாக (அணையாக) இருக்கும் ஸ்ரீ பகவானே அணை. முதல் அணையை அமைத்தவுடன் மலையால் வந்த ஸரஸ்வதீ ப்ரவாஹமும் அவ்விடத்திலேயே ஸ்தப்தமாக நின்றுவிட்டது. அப்படியே ஸகல சொற்களின் ப்ரவாஹமும் பகவானாகிற அணையை எட்டினவுடன் அவனிடத்திலேயே முடிந்துவிடுகின்றது. இது எப்படி யென்றால்: ஶரீரத்தைக் குறிக்கும் ஶப்தங்கள் அந்த ஶரீரத்துக்குள் இருக்கும் ஆத்மாவையும் குறிக்குமானால், அந்த ஆத்மாவுக்கும் ஆத்மாவாக ஒன்று இருக்கும் பக்ஷத்தில் அந்த ஶப்தங்கள் அந்த ஆத்மாவையும் குறிக்கவேண்டு மன்றோ? ஶாஸ்த்ரங்கள் ஸ்ரீ பகவானை ஆத்மாவுக்கும் ஆத்மா வென்று உத்கோஷிக்கிறபடியால், அந்த வெளிப்பட்ட சரீரத்தைச் சொல்லும் ஶப்தங்கள், இந்த அந்தராத்மாவாக இருக்கும் பகவானையும் குறிக்கும். இந்தப் பகவானுக்கும் உள்ளில் வேறொரு அந்தர்யாமி யிருந்தால், ஸர்வ ஶப்தங்களும் அந்த அந்தர்யாமி பர்யந்தம் எட்ட ப்ரஸங்கிக்கும். அப்படி அவனுக்கும் அந்தர்யாமியாக மற்றுமொரு ஆத்மா வொன்று இருக்கின்ற தென்று ஶாஸ்த்ரம் சொல்ல வில்லை யாகையால், எல்லா ஶப்தங்களும் இந்தப் பகவானைக் கிட்டினவுடன் அவனிடத்தில் முடிந்துவிடுகின்றன என்று சொல்லப் படுகின்றது. இது தான் 'எல்லாச் சொற்களும் பரமாத்மாவினிடத்தில் பர்யவஸிக்கின்றன' என்பதன் பொருள். இந்தக் காரணத்தால் ஸ்ரீ பகவானை 'ஸர்வ ஶப்த வாச்யன்' என்று வேதாந்திகள் வ்யவஹரிப்பார்கள். வேதாந்திகளின் வ்யவஹாரப்படி ஒவ்வொரு ஶப்தத்திற்கும் மூன்று குறிப்புக்கள் உண்டு, 'க்ருஷ்ணன்' என்று சொன்னால், அந்த ஶப்தத்தைக் கேட்ட வேதாந்தி, க்ருஷ்ணனுடைய தேஹத்தையும், அந்தத் தேஹத்தினுள் ஆத்மாவாக இருக்கும் ஜீவனையும், அந்த ஜீவனுக்குள் அந்தர்யாமியாக இருக்கும் பரமாத்மாவையும், ஆக மூன்றையும் குறிக்குமென்று அறிவான். இந்த மூன்றும் அந்த ஶப்தத்தின் முக்யமான அர்த்தங்களே என்பது வேதாந்திகளின் கொள்கை எந்த இடத்தில் என்ன அர்த்தத்தை அது குறிக்கின்ற தென்பதை ப்ரகரணங்களை கொண்டு நிர்ணயிப்பார்கள்.

[ப—ரை] ஈ்வஜாங:— நாஶமற்ற, [வேகவதீ பக்ஷத்தில்: பலமான வெள்ளத்தாலும் உடைக்க முடியாத''; பகவத் பக்ஷத்தில் 'நித்யமான] ஸேது:— இந்த அணையானது, வாரஂ—அக்கரைக்கு [வெளியிலிருக்கும் நித்ய விபூதிக்கு] ஶமயிதாஂ—கொண்டுபோய் விடுவதற்கு, ஸமர்தஂ—ஶக்தமாகும்; யத்ர—எந்த அணையினிடத்தில், விஶ்ரமவதீ—தடைப்படுவதற்கு யோக்யமாக இராமலிருக்கும் [மஹத்தான வேகத்துடன் ஓடிவரும்; லக்ஷணை முதலிய தோஷ மிராமல் முக்யார்த்தமாகவே அன்வயிக்கும்] ஸரஸ்வதீ ஸ்ரோதா:— ஸரஸ்வதீ ஸம்பந்தமான ப்ரவாஹமானது [ஸரஸ்வதீ நதி ப்ரவாஹமானது; சொற்களின் கூட்டமானது], விஶ்ராந்தி—முடிவை

ஜயதி ஜகதேகஸேது:
வேகவதீமத்யலக்ஷிதோ தேவ: ।
ஶமயதி ய: ப்ரஜாநாம்
வ்யஸநாநி ஸம்ஸாரஜலதிகல்லோலாந் ॥ 3

அடைந்து விடுகின்றதோ [தடுக்கப்பட்டு அப்படியே தேங்கி நின்று விடுகின்றதோ: அவனைக் குறித்துவிட்டு அவனுக்கும் உள்ளில் வேறொரு வஸ்து இல்லாமையால் மற்ற ஒன்றையும் குறியாமல் அவனைக் குறிப்பதோடு முடிவுபெற்று அவ்விடத்திலேயே நின்று விடுகின்றதோ.]

விஶ்ரம்பம்– இதை 'ே ாத:' என்பதற்கு விஶேஷணமாக எடுத்துக் கொண்டு உரை எழுதப்பட்டிருக்கிறது. இது இரண்டு பக்ஷத்துக்கும் ஒ... வரும். 'விஶ்ரம்பம் விஶ்ராணயதி' என்று க்ரியா விஶேஷணமாகவும் பகவத் பக்ஷத்தில் எடுத்துக் கொள்ளலாம், அப்பொழுது, 'எவ்வித ஸங்கோசமு மின்றிக்கே ப்ரதிபாதிக்கின்றது; என்பது பொருள்: எவ்வித க்லேஶமுமின்றிக்கே ஸ்வஶக்தியாலேயே ப்ரதிபாதிக்கின்றது'

3. வேகவதியின் நடுவில் காணப்படும் அணை கேவலம் ஸம்ஸார ஸமுத்ரத்தின் அக்கரையாகிற மோக்ஷத்திற்குக் கொண்டுபோய் விடுகின்றது என்பது மாத்ர மில்லை; ஸம்ஸாரமாகிற ஸமுத்ரத்தின் அலைகள்போல் இருக்கும் துயரங்களையும் நாஶம் செய்கின்றது என்பது இந்த ச்லோகத்தாற் சொல்லப்படுகின்றது. கீழ் இரண்டு ச்லோகங்களால் பகவான் நமது இஷ்ட ப்ராப்திக்கு உபாயமாகிறான் என்பது விவரிக்கப் பட்டது. இந்த ச்லோகத்தால் அவன் அநிஷ்ட நிவர்த்தநத்தையும் செய்கிறான் என்பது விளக்கப்படுகின்றது.

[ப—ரை] வேகவதீமத்யலக்ஷித:-வேகதியின் நடுவில் காணப்படும், தேவ:' பகவான், ஜகதேகஸேது:- ஸகல ஜந்துக்களுக்கும் முக்யமான அணையாக இருந்து கொண்டு, ஜயதி-விளங்குகிறான். ய:—எந்தப் பகவான், ப்ரஜாநாம்- ப்ரஜைகளின், வ்யஸநாநி- ப்ரஸித்தங்களான. ஸம்ஸாரஜலதிகல்லோலாந்- ஸம்ஸாரமாகிற ஸமுத்ரத்தில் அலைகள் போலத் தென்படும் துயரங்க ளெல்லாவற்றையும், ஶமயதி- போக்கடிக்கிறானே.

ஜகதேகஸேது:- இவ்விடத்தில் 'ஏக' என்னும் சப்தத்திற்கு 'முக்யமான' என்பது பொருள். அதாவது –'ப்ரஸித்த அணைகளைக் காட்டிலும் விலக்ஷணமான' என்பது விவரிக்கப்பட்டதாகிறது. வைலக்ஷண்ய மென்னவென்றால்: ப்ரஸித்த அணைகள் அக்கரையைச் சேர்ப்பிக்க மாத்ரம் உபாயமாகும்; பகவானாகிற அணையோ வென்றால், அக்கரையைச் சேர்ப்பிப்பதோடு நடுவில் ஸம்ஸாரத்தில் ஸம்பவிக்கும் கஷ்டங்களையும் நிவர்த்திப்பிக்கும் என்பதுதான்.

வ்யஸநாநி–ஸம்ஸாரத்தில் ஸம்பவிக்கும் க்லேசங்கள் ஸம்ஸாரிக ளெல்லாருக்கு தெரிந்தவை யன்றோ? [காராக்ருஹம் பவமவி விதந்து கதி திக்ஷேத ஸந்... 'ஸம்ஸாரம் காரா க்ருஹம் போன்றது என்பதை உணர்ந்த எவன் அதை ஸஹிக்கி... பான்?' என்றன்றோ பெரியோர்கள் பேசி யிருக்கிறார்கள்?

டியே யல்லது தேஹத்திலோ ஆத்மாவிலோ இவை எழுதப்பட்டிருக்கவில்லை என்பது யாவரு மறிந்தது. 'கோவிலுக்குள் வரத்தகாதவர்க ளென்று ஒதுக்கப்பட்டிருப்பவர்களை வரச் செய்யவேண்டும்' என்பதே புதிய கிளர்ச்சி. அப்படிப்பட்ட ஜனங்களே ஒரு பலாத் காரச் சட்டத்தினால் வந்து புகுகிறார்க ளென்பதும் இதுவே எங்கும் ஆக்ஷேபிக்கப்பட்டு வருகிற தென்பதும் அசைக்கமுடியாம லிருக்கும்போது 'இவர்கள் அவர்களல்லர்' என்கிற வாதம் காசு பொருதன்றோ ?

'ராமசாமி திருடினான்; அவனைக் கைதுசெய்யவேணும்' என்று பிராது உண்டா யிற்று. ராமசாமி யென்பவன் யாவன்? என்று விசாரம் வந்தவளவில் அந்த நபர் இன்னா னென்று தகுந்த ஸாக்ஷிகளுடன் சுட்டிக் காட்டப்பட்டுவிட்டால் பிறகு விசாரமில்லை யன்றோ ? அதுபோல, சாஸ்த்ரங்களில் தைவஸாந்நித்யம் போவதற்கு ஹேதுவாகச் சொல்லப்பட்ட நபர்கள் இவர்களே யென்று நிர்விவாதமாகப் பல திசைகளிலுள்ளவர் களாலும் நிரூபிக்கப்பட்டு முடிந்துவிட்டதென்றால், இனி வாயெழும்ப இடமேது ?

[தொடரும்]

ஸ்ரீ:

செய்திகள்

1

ஆலய ப்ரவேச விஷயம்

ஸ்ரீ. உப. 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' ஸம்பாதக ஸ்வாமி ஸந்நிதிக்கு—ஸமீபத்தில் ப்ரசுரமான ஸ்ரீ ஸம்பாதகரின் குறிப்பில் "ஹரி ஜநமும் தைவ ஸாந்நித்யமும்" என்ற வ்யாஸத்தைப் பார்வையிட்டேன். அதில் சில ஸந்தேஹங்கள் அடியேனுக்குத் தோன்றின படியால், அவைகளை விஜ்ஞாபநம் பண்ணுகிறேன். அவற்றைத் தெளிவிக்கவேண்டுகிறேன்.

"மாநுஷ வ்யக்த மல்லாத அர்ச்சைகளுக்கு ப்ராயச்சித்தம் செய்த பிறகு ஸேவிக்க லா மென்றும், அதுவும் ஆராதந காலத்தில் ஸமகாலமா யிருக்கலாம்" என்றும் எழுதி யிருக்கிறது. இந்த ப்ராயச்சித்தம் ஒருவிதமாகவும் செய்ய முடியாதே. ஸர்க்கார் சட்ட பூர்வமாகச் செய்த கார்யத்துக்கு ப்ராயச்சித்தம் செய்ய, அவர்கள் எப்படி அநுமதி அளிப்பர் ? அவர்கள் அநுமதிக்காமல், அர்ச்சகர்கள் தாமாகவே செலவு பண்ணிக் கொண்டு செய்வார்களா ? அப்படிச் செய்தாலும், அதை ஸர்க்கார் அறிந்தால் யாதா கும் ? மேலும் அர்ச்சகர்கள் மாநஸிகமாக செய்கிறார்க ளென்பதும் என்ன நிச்சயம் ? அப்படி அவர்கள் செய்வது பொது ஜநங்களுக்குத்தான் எப்படித் தெரியும் ?

சட்ட பூர்வமாக ஹரிஜநங்கள் ஆலயத்துக்குள் எங்கும் எப்போது வரலாமென் றிருக்க, அர்ச்சகர்கள் ப்ராயச்சித்தம் செய்துகொண்டிருக்கும்போதோ, அது முடிந்த தத்க்ஷணமோ அவர்கள் ப்ரவேசித்தால் அந்த ப்ராயச்சித்தத்தால் ஆவதென்ன ? அது வ்யர்த்தந்தானே. அவர்களை உள்ளே ப்ரவேசிக்க வேண்டாம் என்று சொல்வதற்கு மில்லையே! இது விஷயத்தில் வைதிகர்கள் என்ன செய்ய முடியும் ?

தவிர : ஸ்ரீரங்கம் ஸந்நிதி வ்யாபாரங்க ளெல்லாம் பாரமேச்வர ஸம்ஹிதை யின்படி நடந்து வருகின்றன. அதைக் கொண்டுதான் ஸ்ரீரங்கம் ஸந்நிதி விஷயம்

நிர்ணயிக்கப்பட வேண்டும். நீசர்கள் இந்த ஸந்நிதிக்குள் ப்ரவேசித்தால், ஸந்நிதி கருங்கல் கட்டிடமா யிருந்தால் அக்கற்களை யெறிந்து வேறு கற்களைப் புதைத்தும், மண் தரையா யிருந்தால் மண்ணை ஒரு முழம் வரை தோண்டி யெறிந்து வேறு மண் போட்டும் ப்ராயச்சித்தம் செய்யவேண்டுமாமே. அதுவும், அநாசாரம் ஸம்பவித்த 45-நாட்களுக்குள் செய்ய வேண்டு மென்று இருக்கிறதாமே.

இத்யாதி விஷயங்களை யோசித்து ஸ்ரீ ஸ்வாமி அடியேனுடைய ஸந்தேஹத்தைப் போக்குவதுடன், இந்நிலையில் கோயிலுக்குப் போய்த் தீர்த்தம் சடாரி வாங்கிக் கொள்ளலாமா கூடாதா வென்பதை வ்யக்தமாகத் தெரிவிக்க வேண்டுகிறேன். இவ்விடத்தில் பஹு பெயர், ஸ்வாமியின் நிர்ணயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அநுக்ரஹிக்க வேண்டுகிறேன்.

ஸ்ரீரங்கம்,
3-9-47

A. நரஸிம்ஹையங்கார்.

* * * *

2

சுதந்திர விழாக் கொண்டாட்டம்

திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கக் காரியதரிசி ஸ்ரீமான் பந்தல்குடி திருமலை அய்யங்கார் அவர்கள், செந்தமிழ்ச் சோழவள நாட்டில் உள்ள காவிரிப்பூம்பட்டினம் சிர்காழி திருவாலி திருநகரி குத்தாலம் முதலிய புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று நம் பாரத வன்னை தளையவிழ்ந்து சுதந்திரம் அடைந்த வைபவத்தை ஆங்காங்கு குழுமிய அன்பர்கட்கு எடுத்து விளக்கி 18-8-37-ல் தேரழுந்தூரை அடைந்தார். அம்மாநகரில் உள்ள அன்பர்களின் வேண்டுகோட் கிணங்கி ஸ்ரீ ஆமருவியப்பன் ஸந்நிதியின் கல்யாண மண்டபத்தில் பிற்பகல் 3-மணிக்கு விழா ஆரம்பமாகியது. திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்க உபதலைவரும், தேரழுந்தூர் ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸபைத் தலைவரும், சிறந்த தேசிக பக்தரும் ஆகிய ஸ்ரீமான் டி. எஸ். சுந்தரமய்யங்கார் அவர்கள் B.A., L.T., அவைத் தலைமை தாங்கினர்.

தலைவர் முன்னுரையாகப் பேசியதின் ஸாராம்சமாவது:— இப்பேரவையில் பூர்ண ஞானமில்லாத யான் பேசப்புகுவது, ஓசை பெற்றுயர் பாற்கட லுற்றொரு பூசை முற்றவு நக்குபுக்கெனலாகும். சென்ற ஆண்டில் இச்சிறிய திவ்ய தேசத்தில் நடைபெற்ற கம்பர் விழாக் கொண்டாட்டத்தில் யான் கலந்து கொண்ட பிறகு, எனக்குத் தமிழில் ஓர் ஆர்வம் உண்டாயிற்று. மதுரை ஸ்ரீமான் N. R. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கா ரவர்களும், எனது உயிர் நண்பர் ஸ்ரீமான் பந்தல்குடி திருமலை அய்யங்கார் அவர்களுமே எனக்குத் தமிழில் உண்மையான திடமான பற்றை உண்டு பண்ணினவர்கள். கல்வியிற் பெரிய கம்ப நாட்டாழ்வான் அவதரித்த இந்த நகரில் அவ் வாழ்வான் விஷயமாக இங்கு இப்பொழுது வந்துள்ள ஸ்ரீ திருமலை அய்யங்கார் அவர்கள் பேசப் போகிறார்கள். அதற்கு முன் நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகின்றேன்.

பகவத் குணங்களிலே ஈடுபட்டவர்கள் ஆழ்வார்கள், அவர்களிடம் ஈடுபட்ட மஹான்களை 'ஆழ்வான்' என்று குறிப்பிடுவது ஸம்ப்ரதாயம். ஸ்ரீமந் நாதமுநிகள் திருவோலக்கத்தில் ஒரு பங்குனி உத்திரத்தில் திருவரங்கத்தில்,

இவ்வூரில் அவதரித்த கம்ப நாடன் தான் இயற்றிய இராமாவதாரத்தை அரங் கேற்றினன், ஸ்ரீமந்நாதமுனிகள் மிகவும் உகந்தருளி அவனுக்குக் 'கவிச் சக்ர வர்த்தி' 'கம்ப நாட்டாழவான்' என்ற பிருதங்கள் அளித்துக் கௌரவித்தார். இவ்வாழ் வான் பாடல்கள் நாலாயிரத்துள் சேர்க்கப் பெற்று, அத்யாபக கோஷ்டியினரால் திவ்ய தேசஸந்நிதிகளில் இன்றும் ஸேவிக்கப்பெற்று வருகின்றன. இவர் பாடிய சட கோப ரந்தாதியில் உள்ள "அந்தணர்க்கோ" என்ற பாசுரம் ஸந்திப்பு உத்ஸவத்தில் அரையரால் ஆழ்வார் திருநகரியில் இன்னும் ஸேவிக்கப் பெற்று வருகிறது. 'தராதலத்தி னுள்ள' என்ற தனியன் ஸ்ரீமந் நாதமுனிகள் அருளிச்செய்ததாக ஆன்றோர் கூறுகின்ற னர். கம்பன் ஆமருவியப்பனின் அவதாரம். வேறு எங்கேயாவது ப்ரஹ்லாதன் பெருமாள் பக்கத்தி லிருக்கின்றாரா? தமது இராமாயணத்தில் சிங்கப்பிரான் வைபவத்தைக் கம்பர் பாடியதின் மர்மம் தெரிவில்லையா? 'கன்னன் பிறப்பும் பின்னுளிற் றுலங்கிற்று கம்பன் பிறப்பு இன்னம் அறிந்தார்க ளில்லை. இது முக்காலும் மெய்ம்மையே' என்று ஸ்ரீமான் வண்ணச்சரபம் தண்டபாணி ஸ்வாமிகள் பறைசாற்றியுள்ளார். 'ஈடார் தருஞ் சோழ நாடதில்' என்ற பாட்டில் நம்முன் னுள்ள த்வஜஸ்தம்பத்தி னடியில் ஒரு சிசு இருப்பது கண்டு அதற்குக் 'கம்பன்' எனப் பெயரிட்டு மகிழ்ந்ததே உண்மை. மற்றவெல்லாம் பொருத்த மில்லாத கட்டுக் கதை. கல்வியிற் பெரிய கம்ப நாடனின் கவிதையை நன்கோதி நலம் பெறுவோமாக.

பின்னர் 'கம்ப நாட்டாழ்வான்' எனும் விஷயம் பற்றி ஸ்ரீமான் திருமலை அய்யங்கார் அவர்கள் ஓர் அழகிய சொற்பொழிவு ஆற்றினார்கள். அவர்கள் கூறிய தாவது:— இன்று சுதந்திரம் அடைந்துவிட்டது நம் நாடு. இந்நிலை அடைவதற்கு உதவிய நம் நாட்டுப் பெரியோர்களுக்கு நமது நன்றி உரியதாகும். 'என் சிங்கப்பிரான் பெருமை ஆராயும் சீர்மைத்தே!' என்றார் நம்மாழ்வார். இதனை உள்ளபடி ஆராந்து வெளியிட்ட நிலையே தான் கம்பன் 'ஆழ்வான்' ஆனான். கம்பத்திடைத் தோன்றிய தூணப்பனே கம்பன். அவனே சிங்கப்பிரான். அவனது பக்தனே கம்ப நாடன். 'நாடி நாடி நரசிங்கா' என்பதை நன்கு நோக்குக. கம்ப நாட்டாழ்வான் என நம் ஆசாரியர்கள் கொண் டாடிய பிறகு அவனைத் தக்க முறையில் கொண்டாட வேண்டியது நமது கடமையாகும். ஆழ்வாரிடம் பரம பக்தியும் ஈடுபாடும் கொண்டுள்ள அவனைக் கௌரவித்தால் நாடு நல மடையும். அவன் பாடிய இராமாவதாரத்தை நாம் நன்கு தெளியக் கற்று இன்புறுவோமாக.

தலைவர் முற்றுரைக்குப் பிறகு இரவு 7½-மணிக்குக் கொண்டாட்டம் இனிது நிறை வெய்தியது.

ஒரு விசேட நிருபர்.

* * * *

3

கல்கத்தாவில் ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிக, ஸ்ரீமதாதிவண் சடகோப யதீந்த்ர மஹா தேசிகர்களின் வார்ஷி மஹோத்ஸவங்கள்.

முக்தி தரும் நகரெழில் முக்கியமாம் கச்சித் திருப்பதியில் திருவவ தரித்து, பொருந்திப் புவிதனில் பொய் வாழ்க்கை பூண்கின்ற பூரியர்களுக்கு இருந்த நரகி னிடர் கெடு மாற்றம் அறிவித்து, ஞான விளக்கை யேற்றி இருளனைத்தும் மாற்றி, மன்னிய நற்றிரு மந்திரத்தின் பொருள் நிலையைப் பொன்னருளா லருளிய நம் தூப்புல் வள்ளலுக் கும், புரட்டாசிக் கேட்டைதன்னில் புவி யுதித்து, ரஹஸ்யத்ரயங்களை ரஸித் துரைத்து, அகவாயில் உயிர்களுய்ய அருள்படைத்த ஸ்ரீமதாதிவண் சடகோப யதீந்த்ர மஹா தேசிகனுக்கும், நடந்த புரட்டாசியீ"-ல் வார்ஷிக - மஹோத்ஸவங்கள். ஸ்ரீம தழகிய

ஸிங்கரிடம் மிகுந்த ப்ரதி பத்திவாய்ந்த ஸ்ரீஸ்ரீ பெரிய மஹாராணி ஸ்ரீ லக்ஷ்மி தேவியாரால் கத்வால் ஸமஸ்தாநத்தில் பல ஆஸ்திக சிகாமணிகளால் கல்கத்தா நகரிலும் மிகுந்த ச்ரத்தா பக்தியுடன் நடத்தப்பட்டன வென்று முறையே ஸ்ரீ. உப. K. V. ஸந்தாந கோபாலனும், ஸ்ரீ. உப. வாங்கள் நாராயணாசார்ய ஸ்வாமியும் அறிவிக்கிறார்கள்.

* * * *

4

ஸ்ரீ தேசிகன் உத்ஸவங்கள்

உப்பிலியப்பன் கோவில் என வழங்கப்பட்டுவரும் திருவிண்ணகர் திவ்ய தேசத்தில் கோயில் கொண் டெழுந்தருளியுள்ள ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகனுக்கு, நிகழும் புரட்டாசிமீ 1௳ முதல் 10௳ வரை 10 நாட்கள், வார்ஷிக மஹோத்ஸவம் வெகு ஸம்ப்ரமமாக நடைபெற்றது. அம்மஹோத்ஸவத்தில் வேதபாராயண அத்யாபக ஸ்வாமிகளுக்கு ஸ்ரீ. உப. வித்வான் நவநீதம் க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி அத்யந்த ஆதரத்துடன் ஆதித்யம் செய்தருளினர். அம்மஹோதஸவத்தில் ஆறும் உத்ஸவ திநத்தன்று, ஸ்ரீ. உப. வித்வான் தேவனார்விளாகம் லக்ஷ்மீ நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ தேசிகனைத் தம் தோட்டத்தில் எழுந்தருளப்பண்ணி உத்ஸவத்தை அந்யாத்ருசமாக நடத்தி வைத்தார்.

* * * *

தஞ்சாவூரை யடுத்த வெண்ணாற்றங் கரையிலும், ஸ்ரீ தேசிகன் பத்து நாளும் மிக்க வைபவத்துடன் மஹோத்ஸவம் கண்டருளினர். சாத்துமறை உத்ஸவமும் ப்ரபலமாக நடந்தேறிற்று அன்று, அத்யாபக-வேதபாராயண ஸ்வாமிகளின் ஸம்பாவனைக்குப் பின்னர், அட்வொகேட் ஸ்ரீ. உப. R. ரங்கஸாமி ஐயங்கார் ஸ்வாமி, ஸ்வாமி தேசிகனுக்கு உத்ஸவம் மிக்க வைபவத்துடன் நடத்தவேண்டிய ஆவச்யகதையைப் பற்றியும், ஸ்ரீ தேசிகனுடைய கோதிலாத் தாண்மலரை யடைந்து உஜ்ஜீவிப்பதே யாவர்க்கும் ஸ்வரூபம் என்பது பற்றியும் ஒரு சிறு சொற்பொழி வாற்றினர்.

ஏமப்பூர். ராமஸ்வாமி தாஸன்.

5

ஸ்ரீமதாதிவண் சடகோப யதீந்த்ர மஹா தேசிகன் வார்ஷிக திருநக்ஷத்ர வைபவம், தையாறு.

தையாறு க்ராமம் ஸ்ரீ அஹோபில மடத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமதாதி வண் சடகோப யதீந்த்ர மஹா தேசிகனுடைய வார்ஷிக மஹோத்ஸவம், புரட்டாசிமீ 2௳ ஸ்ரீ ஸந்நிதி திட்டத்தில் உபக்ரமிக்கப்பட்டு விசேஷமாய் நடைபெற்றது. சாத்துமறையன்று ஸ்ரீ ஸ்வாமி, ஸ்ரீ ஸ்ரீநிவாஸப் பெருமாள் ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஸந்நிதிகளுக்கு ஸகல பிருதாலங்காரங்களோடு எழுந்தருளி மங்களாசாஸநம் செய்தருளினர். பிறகு ஸ்ரீ மடத்துக்கு எழுந்தருளி ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனையும் மங்களாசாஸநம் செய்தருளினர். சோகத்தூர் ஸ்ரீ. உப. லக்ஷ்மீ நாராயணாசார்யர் ஏற்பாடு செய்திருக்கும் உண்டித் திட்டத்தின்படி, ராத்ரி சாத்துமறை விசேஷ தளிகைகளுடன் நடைபெற்றது. ஷை இரண்டு பெருமாள் ஸந்நிதிகளிலும் இம்மஹோத்ஸவம் ஆவணிமீ 27௳ உபக்ரமிக்கப்பட்டுப் பத்து நாளும் வெகு விமர்சையாக நடைபெற்றது. விசேஷ ஸ்வாமிகள் ஸேவை ஸாதித்தனர்.

சோகத்தூர். S. லக்ஷ்மீநாராயண தாஸன்.

6

ஸ்ரீ அண்ணுஸ்வாமி ஐயங்கார் நான்காவது வித்வத் ஸபை

ஷை ஸபையானது, புரட்டாசிமீ 29உ (15–10–47) புதன்கிழமை முதல் ஐப்பசிமீ 2உ (19–10–47) வரை ஐந்து நாட்கள், மன்னுர்குடி அக்ரஹாரம் முதல்தெரு லக்ஷ்மீ பவநத்தில் நடைபெற்றது. ப்ரதி திநம் காலே, வேதத்திலும் மதத்ரய வேதாந்தங்களிலும் பரீக்ஷையும் வாக்யார்த்தங்களும், மாலே 5-மணி முதல் ப்ரபல வித்வான்களேக் கொண்டு உபந்யாஸங்களும் நடத்தப்பட்டன. வித்வான்களும் ஆஸ்திக மஹான்களும் பலர் விஜயம் செய்து ஸதஸ்ஸை வெற்றிகரமாக நடத்தி வைத்தனர்.

ஸ்ரீநிவாஸ தாஸன்

*   *   *   *

7

ஸ்ரீ அஹோபிலமடம் 51-வது பட்டத்தில் உஞய-ாஹிஷிக்தராய் எழுந்தருளியிருந்த

ஸ்ரீலக்ஷ்மீ நரஸிம்ஹ ஸ்ரீகோவய தீந்த்ர மஹாதெஶிகனுடைய ஷஷ்டவஷீாரா யநவதி்கா

கா நஞ்சாந உண்டம் ஸாவிஷ்த்த விஜ்ஞாவநம்.

இப்பவும் நாளது ஸர்வஜித் ஐப்பசிமீ 1உ (18-10-47 ஶுக்லவம் தஶி சனிக்கிழமை, அடியேன் பிதாவான ஸ்ரீஅஹோபிலமடம் ஸ்ரீலக்ஷ்மீ நரஸிம்ஹ திவ்யஸ்தாநத்தில் 41-வது பட்டத்தில் உஞஷாஹிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீமதெசாரவ்ருதிஷாவநா அாயஷ வாஹம்ஸவரிவ்ராஜகா அாயஷ ஸவஷதந்த்ஸ்தந்த்ரஹயவெஷாஞா அாயஷ ஸ்ரீமதவத்ராஜா நாஜவிஙாஞநியஷாரண ஸாவஷஹெளம ஸ்ரீவண்ஶகோவ ஸ்ரீலக்ஷ்மீ நரஸிம்ஹ ஸ்ரீகோவய தீந்த்ர மஹாதெஶிகனுடைய வஷாராயந கைங்கர்ய மஹோத்ஸவத்தை ஸ்ரீ அழகியசிங்கருடைய அவதார ஸ்தலமான காருகுறிச்சியில் வேதவாராயண திவ்யப்ரபந்த்ரம்ய அஷ்டகாயாதி வாராயணத்துடன் புரட்டாசிமீ 92உ உபக்ரமித்து இம்மஹாதேசிகனின் அநுக்ரஹ விசேஷத்தால் நடத்த நிஶ்சயித்திருக்கிறது. அந்த மஹோத்ஸவத்திற்கு தேவரீர் ஸகுடும்பமாய் எழுந்தருளி கைங்கர்யத்தில் அன்வயித்து ஸ்ரீ அழகியசிங்கரின் அநுக்ரஹத்திற்கு வாத்ரமாகி க்ருதார்த்தராகும்படியாய் ப்ராத்திக்கிறேன்.

காருகுறிச்சி.
சேரன் மகா தேவி போஸ்டு.
1–10–47

தாஸந,
தட்டை வாயஞ்ய ஶாவாஞாமாவாயன்.

[குறிப்பு] ஸ்ரீ அஹோபிலமடம் 33-ம் பட்டம் பரந்தூர் ஸ்ரீ சடகோப ராமாநுஜ யதீந்த்ர மஹா தேசிகனுடைய வார்ஷிக திருநக்ஷத்ர மஹோத்ஸவம், புரட்டாசிமீ 30உ வியாழக்கிழமை.

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

𑌯𑍋𑌽𑌨𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍍𑌯 𑌮𑌮 𑌵𑌾𑌚𑌮𑌿𑌮𑌾𑌂 𑌪𑍍𑌰𑌸𑍁𑌪𑍍𑌤𑌾𑌂
𑌸𑌂𑌜𑍀𑌵𑌯𑌤𑍍𑌯𑌖𑌿𑌲𑌶𑌕𑍍𑌤𑌿𑌧𑌰𑌃 𑌸𑍍𑌵𑌧𑌾𑌮𑍍𑌨𑌾 ।
𑌅𑌨𑍍𑌯𑌾𑌂𑌶𑍍𑌚 𑌹𑌸𑍍𑌤𑌚𑌰𑌣𑌶𑍍𑌰𑌵𑌣𑌤𑍍𑌵𑌗𑌾𑌦𑍀𑌨𑍍
𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑍍𑌨𑌮𑍋 𑌭𑌗𑌵𑌤𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌯 𑌤𑍁𑌭𑍍𑌯𑌮𑍍 ॥

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

வடதேசத்து அட்டூழியங்கள் இன்னும் ஒய்ந்தபாடில்லை. மூடர்களான ஜனங்களுக்குள் இருந்த கலஹம், ராஜாங்கத்திற்கு நிர்வாஹகர்களாக இருக்கும் அதிகாரிகளிடமும் பரவிவிட்டது. பாகிஸ்தான் ஆஸந்நமான ஆபத் என்று சொல்லப்படும் துருஷ்க ராஜ்யத்தின் அதிகாரிகள், இந்தியா வென்று சொல்லப்படும் ராஜ்ய அதிகாரிகள் மீது ஏராளமான குறை கூறுகிறார்கள்; இவர்களும் அவர்கள் மீது அபாரமான குறை கூறுகின்றனர். இந்திய ராஜ்யத்தில் வஸிக்கும் துருஷ்கர்களை அந்தத் தேசத்தின் அதிகாரிகள் நிஷ்பக்ஷபாதமாக நடத்தவில்லை யென்றும், துருஷ்க ராஜ்யத்திலுள்ள இந்தியர்களை அந்தத் தேசத்து அதிகாரிகள் நன்றாய் நடத்தவில்லை என்பதுமே அவர்கள் ஒருவர்க் கொருவர் கூறிக்கொள்ளும் குறைகள். ஆரம்பத்தில் இரண்டு ராஜ்யங்களிலும் இரண்டு ஜாதீயர்களும் இப்படி இருப்பதைப் பார்த்து, இரண்டு ராஜ்யத்து அதிகாரிகளும் தங்கள் தங்கள் ராஜ்யத்திலுள்ள ப்ரஜைகள் எல்லாரையும் எவ்வித பக்ஷபாதமு மின்றிக்கே நடத்துவதாகப் பரஸ்பரம் ஒப்பந்தம் செய்துகொண் டிருந்தார்கள். அதன் ப்ரகாரம் அவர்கள் இருவரும் நடக்கவில்லை யென்பதுதான் குற்றம். ஆனால் ஒப்பந்தத்திற்குக் கட்டுப்பட்டு நடக்கிறார்களா இல்லையா என்பதை யார் பரீக்ஷித்துப் பார்க்கிற தென்பது தெரியவில்லை. ப்ரஜைகளின் வார்த்தைகளை நம்பி ஒன்றை நிர்ணயிப்ப தென்பது துஸ்ஸாத்யம். ப்ரஜைகளுள் உள்ளதை உள்ளபடி சொல்பவர்களு முண்டு; ஒன்றைப் பத்தாகப் பெருக்கிச் சொல்பவர்களு முண்டு. தவிர: ஜந்மஸித்தமான ஸ்வஜந விச்வாஸமும் பரஜந அநாதரமும் யாரை விடும்? ‘𑌬𑌲𑌾𑌦𑌿𑌵 𑌨𑌿𑌯𑍋𑌜𑌿𑌤𑌃’ என்றன்றோ காம க்ரோதங்களுக்கு அதிமாத்ரம் பரவஶமாக ஜனங்கள் தமது கார்யங்களைச் செய்கிறார்கள்? ஆகையால் ஒருவித தோஷமு மிராம லிருக்கையிலும் ஆக்ரஹத்தால் உண்மை மறைந்தே நிற்கு மன்றோ? இம்மாதிரியான ஸ்திதியில் ஸமாதானத்துக்கு இடமேது?

ப்ரக்ருதம் அநேக துஷ்டர்கள் இந்தக் கலக்கத்தை வ்யாஜமாகக் கொண்டு கூட்டங் கூட்டமாகக் கிளம்பி, நிரபராதர்களான ப்ரஜைகளை, மநஸ் ஸால் நினைப்பதற்குக்கூட அஸஹ்யமா யிருக்கும் ஹிம்ஸைக்கு உட்படுத்தி வருகிறார்கள். இந்தத் துஷ்டர்களை ராஜாங்கத்தார் அடக்கவில்லை. ஒருக்கால் அடக்குவதற்கு அவர்களுக்கு ஶக்தி யில்லையோ? இல்லாவிட்டால் ஔதாஸீந் யத்தால் இவ்விதம் விலகி நிற்கிறார்களோ? அறியோம். மூன்று நாலு மாஸ காலமாக இத்தகைய அட்டூழியங்கள் தொடர்ந்து நடந்து வருகின்றன வென்றால், ஏன் இம்மாதிரியான ஶங்கை உண்டாக மாட்டாது?

நிற்க: மஹாத்மா காந்தி, ஒருவரும் எவ்வித ஹிம்ஸையிலும் ப்ரவர்த் திக்கக்கூடா தென்று பலமாக உபதேஶித்து வருகிறார். அந்த உபதேஶம் மிகவும் உத்தமமானதே. ஆனால் அந்த உபதேஶத்துக்குக் கட்டுப்பட்டு நடப் பவர்கள் நமது ராஜாங்கத்தினரே; பாகிஸ்தானைச் சேர்ந்தவர்களோ பெரும் பாலும் அதை அநாதரிப்பவர்களே. அநாதரிப்பது மட்டும் அல்ல; இவர் களுக்கு இந்த உபதேஶம் மிகவும் அநுகூலமாகவும் ஆய்விட்டது. எதிரிகள் ப்ரதி ஹிம்ஸை செய்யமாட்டார்க ளென்பது ஏற்பட்டு விட்டால், ஹிம்ஸிக்கு மவர்களுக்கு அச் செய்கை அநுகூலம்தானே. இப்படி அடிபடுவதை ஸஹி யாமல் லக்ஷக் கணக்கான நமது இந்திய ஜநங்கள் தமது வீடு வாசல்களைத் துறந்து தேஶாந்தரத்தைத் தேடி ஓடுகிறார்களாம். அப்படி ஓடுபவர்களுள் அநேகம் பெயர்களை வழி மறித்து, எதிர்க் கக்ஷிக்காரர்களுள் பலர் வெட்டிக் கொல்கிறார்க ளென்று கேள்விப்படுகிறோம். இந்த ஸ்திதியைப் பார்க்கும் போது, இந்த இரு கக்ஷிக்காரர்களுக்கும் மஹத்தான யுத்தம் வந்து விடுமோ வென்றும் பயம் ஜநிக்கிறது. அப்படி யுத்தம் நேர்ந்தால், இந்தத் தேஶத்திற்கு அதோகதி நிச்சிதம். பகவத் ஸங்கல்பத்தை யாரால் தடுக்க முடியும்?

* * * * *

ஹிந்துமத ஸம்பந்தங்களான தர்ம ஸொத்துக்களின் பரிபாலநத்தைச் சீர்திருத்தி, அந்த ஸொத்துக்களைத் தர்மத்துக்கு ஒத்தபடி நடப்பிக்கவேண்டு மென்னும் எண்ணத்துடன், சில வர்ஷங்களுக்கு முன் 'ஹிந்து மத தர்ம ஸொத்துக்களின் பரிபாலந ஸங்கம்' என்று ஒரு கூட்டம் ராஜாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்டது. அந்தக் கூட்டம் 5, 6 – அங்கத்தினரை உறுப்பினராகக் கொண்டது. அவர் களுக்குக் கீழே அநேக பரிஜநங்கள் உண்டு. இவர்கள் எல்லார்க்கும் அந்தத் தர்ம ஸொத்தின் வருமானத்தில் ஒரு பாகத்தைக் கொண்டு ச்ரம தக்ஷிணை முதலியவை கொடுப்பதுடன், மற்றைச் செலவுகளையும் அதைக்கொண்டே செய்து வருகிறார்கள். இந்த ஸபை

ராஜாங்கத்தாரும் ஹிந்து தர்ம ஸ்தாநங்களும்.

ஏற்பட்டு இப்பொழுது சற்றேறக்குறைய 20-வர்ஷங்கள் ஆகின்றன. இந்த ஸபையால் இது பர்யந்தம் தர்ம ஸ்தாநங்களுக்கு என்ன ஆநுகூல்யம் ஏற்பட்ட தென்பதைப்பற்றி ஜநங்களுக்குள் பிந்ந பிந்நமான அபிப்ராயம் இருந்து வருகின்றது. அதைப் பற்றி விசாரிக்க இப்பொழுது நாம் புக வில்லை.

இப்பொழுது இந்த ஸபையார், தமது ஸபையை இன்னும் பலப்படுத்திக் கொள்ளவேண்டு மென்னும் எண்ணத்துடன், இதற்கு முன் இது ஸம்பந்த மாக இருந்த சட்டத்தை ஒழித்துவிட்டு, இந்த ஸபையை ஸாக்ஷாத்தாக ராஜாங் கத்தின் ஓர் அங்கமாகச் சேர்த்துவிடவேண்டு மென்றும், இதன் சட்டங்களை மீறி நடப்பவர் தண்டிக்கப்படுவ ரென்றும், ஆலய வ்யவஹாரங்க ளெல்லாம் ராஜாங்கத்தின் கணக்கிலேயே சேர்க்கப்படவேண்டு மென்றும், இன்னும் இம்மாதிரியான பல மாறுதல்களை ஏற்படுத்தும் பொருட்டுப் புதிய தொரு சட்டத்தைச் செய்யப் போவதாக ஸங்நாஹம் செய்து வருகிறார்கள். இது பர்யந்தம் வழங்கி வந்த சட்டம் ஸாக்ஷாத்தாக ராஜாங்கத்தின் மேற் பார்வைக்கு இடம் கொடாததாலே, அது பர்யாப்தமான பலத்தை உடைத்தா யிருக்கவில்லை யென்பதும், இந்த நிர்வாஹத்தைத் தாங்கள், ஸாக்ஷாத் ராஜாங் கத்து ஸேவகர்களாக இருந்து நடத்தினால் அது பலவத்தரமாக ஜநங்களைக் கட்டுப் படுத்து மென்பதுமே இப்புதிய சட்டத்தின் முக்ய நோக்கு. அதோடு கூட, இப்பொழுது தமது பரிசீலநத்துக்கு வராமல் சில தர்ம ஸ்தாநங்கள் விலக்கிவைக்கப்பட்டிருப்பதும் அவர்களுக்கு அஸம்மதம். ஸகல தர்மஸ்தாநங் களையும் தமது அதிகாரத்துக்கு உட்படுத்தவேண்டுமாம். தாம் இச்சிக்கிறபடி சட்டங்களை மாற்றுவதற்கும் அதிகாரம் வேண்டுமாம். இந்த ராஜாங்கத் தாருக்கு இப்பொழுது பூர்ண ஶக்தி வாய்ந்திருக்கிறதாகையால் இந்தச் சட்டத்தைச் சீக்ரத்திலேயே அவர்கள் அப்யுபகதமான சட்டமாகச் செய்து விடுவார்க ளென்பதில் ஆக்ஷேப மில்லை. ஸ்வதந்த்ரர்களாகயும் ஶக்தி வாய்ந்த வர்களாகவும் இருக்கும் அதிகாரிகள், எந்தக் கார்யத்தைத் தான் ஸாதித்துக் கொள்ள மாட்டார்கள்?

இவர்கள் செய்யப் போவதாக ப்ரஸ்தாவிக்கப்பட் டிருக்கும் சட்டத் தில் அநேக தோஷங்கள் இருக்கின்றன வென்பது நமது அபிப்ராயம். முத லில், இந்தத் தர்ம ஸ்தாந விசாரணை முழுவதும் ஒரே ஆதேஷ்டாவின் அதிகாரத் துக்கு உட்பட்டதாக விதிக்கப்பட்டிருக்கிறது. அவருக்கு இந்த விஷயமாய்க் கொடுக்கப்படுவதாக உத்தேஶிக்கப்படும் ப்ரபுத்வமும் ஒருவித பரிச்சேதத்திற் கும் உட்பட்ட தில்லையாம். அவர் இச்சிக்கிற ப்ரகாரம் புதிய விதிகளை ஏற் படுத்தலாமாம். அவர் இஷ்டப்படி வரவு செலவுகளை நியமிக்கலாமாம். பஹு காலமாக அநுஷ்டாநத்தில் இருந்து வந்த விதிகளையும் மாற்றலாமாம். இப்படி

ஒருவரை ஸர்வாதிகாரியாக நியமித்துவிட்டால், அவர் ஸாத்விகராகவும் ஸமர்த்தராகவும் இருந்தாலொழிய ப்ரஜைகளுக்கு அது அநேக ப்ரகாரங்களில் அநர்த்தத்துக்குக் காரணமாகுமன்றோ? அவரால் செய்யப்படும் நிர்ணயங்களின் ஸாத்வஸாது பாவத்தைப் புந: பரிசீலநம் செய்வதற்குச் சில மேல் அதிகாரிகளும் இல்லை. அவர்கள் உண்டானால், ஒரு வ்யக்தியால் நிர்ணயிக்கப்படும் ஸித்தாந்தங்களுக்கு ஸாம்பாவிதமான குறைவுகள் நீங்க இடமுண்டு. அப்படிப்பட்ட புநர்விசாரத்துக்கு வேண்டிய வ்யவஸ்தை ஒன்றும் செய்யப்படவில்லை.

நிற்க: இந்த ஸர்வாதிகாரியின் மேற்பார்வை கேவலம் ஸ்தூல மன்றும்; பல நியமங்களுக்கு உட்பட்டுப் பஹு காலமாக அநுஷ்டிக்கப்பட்டு வரும் அந்தரங்கமான விஷயங்களிலும் இவருக்கு ப்ரவேசம் உண்டாம். ஸாம்ஸாரிக விஷயங்கள் எல்லாவற்றையும் ஒழித்து, அளவற்ற ஜநங்களால் ஜகதாசார்யராகக் கொண்டாடப்பட்டு வரும் முக்த துல்யர்களான ஸந்யாஸிகளின் கார்யங்களில், கேவலம் ஒரு லௌகிகன் ப்ரவேசித்து, அவைகளை மாற்றுதல் முதலிய திருத்தங்களைச் செய்வதென்றால், அதை ஸமூஹம் ஸஹிக்குமா?

இரண்டாவது: இந்தத் தர்ம ஸ்தாநங்களின் கடமை, கேவலம் இந்த லோகத்தின் வ்யவஹாரத்தைப் பற்றியது மாத்ரமல்ல; ஆத்ம ஸம்பந்தமான வ்யாபாரங்களும் இதற்குப் பல உண்டு. இதை நியமித்து நடத்துவதற்கு ஏற்படுத்தப் போகும் அதிகாரியோ ஒரு லௌகிக புருஷர். அந்த லௌகிகர் இந்த ஸ்தாநத்தைச் சீர்திருத்துவதற்கோ விசாரிப்பதற்கோ யோக்யரா? ச்ருதி ஸ்ம்ருதிகளை அப்யஸித்துப் பால்யம் முதலாக ஆத்ம ஸம்பந்த விசாரங்களில் பரிசயப்பட்டவர்க ளன்றோ இந்த அநுஷ்டாநங்களின் குண தோஷங்களை விசாரிப்பதற்கு அர்ஹர்கள்? லௌகிக விஷயங்களின் பரிசயம் அபேக்ஷிதமானால், ஒரு லௌகிகப் பெரியார் ஸர்வாதிகாரியாக நியமிக்கப்படட்டும். ஆனல் இவருடன் கூட மற்றொரு வைதிக பண்டிதரையும் ஏற்பாடு செய்தல் வேண்டும். இம்மாதிரியாக ஒன்றும் செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

மேலும்: இக் காலத்திய லௌகிகப் பெரியோர்கள் ப்ராயேண ப்ரஜைகளின் ஐஹிக நன்மைகளையே ப்ரதாநங்களாகக் கருதுமவர்கள். அப்படிப்பட்ட ஒருவர் அதிகாரியாக வந்தால், தர்மஸ்தாநங்களின் ஸொத்துக்களை ஏன் லௌகிக ச்ரேயஸ்ஸுக்கு உபயோகப்படுத்தப்படக்கூடா தென்னும் எண்ணம் அவர்களுக்குத் தோன்றும்; அவர்கள் அப்படியே செய்வார்களென்று நினைக்க ஹேதுக்கள் இருக்கின்றன. அப்படிச் செய்வதற்கு இடங் கொடுக்கும்படியாகச் சட்டங்களை ஏற்படுத்துவது தர்மமாகுமோ? இந்தத் தோஷங்கள்

எல்லாவற்றையும் ஶாந்தமான மநஸ்ஸுடன் விசாரித்துப் பார்த்து, இந்த ப்ரயத்நத்திலிருந்து அதிகாரிகள் விரதராகவேண்டு மென்று ப்ரார்த்திக்கிறோம்.

* * * *

இப்பொழுது நமது தேவாலயங்க ளெல்லாவற்றிலும் ஹரிஜந ப்ரவேஶம் பெரும்பாலும் ஏற்பட்டு விட்டது. இனி நாம் அந்த ஆலயங்களுக்குப் போய் அர்ச்சா மூர்த்தியை ஸேவித்து வரலாமா? இல்லா விட்டால் அவைகளுக்குப் போகாமலே நின்றுவிட வேண்டுமா? என்னும் ஸந்தேஹம் அநேக ஆஸ்திகர்களைப் பாதித்துக் கொண்டிருக்கிறது. இதைப்பற்றி அநேக ஸுஹ்ருத்துக்கள் எழுதுகிறார்கள். இதன் நிர்ணயம் ஶாஸ்த்ர விசாரம் செய்தே பெறக்கூடிய தாதலால், ஶாஸ்த்ரஜ்ஞர்களான வித்வான்கள் ஒன்று சேர்ந்து விஷயத்தைக் கூலங்கஷமாக விசாரித்து ஒரு நிர்ணயத்தை வெளியிட வேண்டு மென்று நாம் நமது வித்வத் ஸுஹ்ருத்துக்களை ப்ரார்த்திக்கிறோம்.

வைதிகர்களும் தோஷ துஷ்ட ஆலயங்களும்.

நாம் விசாரித்த பர்யந்தம், ஸ்ரீரங்கம் காஞ்சீ முதலிய ப்ரஸித்த க்ஷேத்ரங்களில் ஶிஷ்டர்களாகவும் வ்யபதிஷ்டர்க ளாகவும் இருக்கும் ஸ்ரீ வைஷ்ணவாக்ரேஸரர்கள் ஹரிஜநங்களின் ப்ரவேஶம் ஏற்பட்ட ஆலயங்களி லிருந்து விமுகர்களாக இருக்கிறார்க ளென்றே அறிகின்றோம். அவர்களுடைய அநுஷ்டாநமே போதுமான ப்ரமாணமானாலும், சிற்சில விடங்களில் இதைப்பற்றி ஸ்வல்ப விப்ரதிபத்தி யிருக்கிறபடியால், அந்த ஶிஷ்டர்கள் ஒன்று சேர்ந்து விஷய விசாரம் செய்து ஒரு நிர்ணயத்தை வெளியிட்டால், அது மஹா ஜநங்களுக்கு ஒரு ஸமாதாநத்தைக் கொடுக்கும். அர்ச்சாவதாரைக கதிகளாக இருக்கும் மடாதிபதிகள் இதில் ப்ரதம ப்ரவ்ருத்தியைச் செய்வது மிகவும் உசிதமாக இருக்கு மாதலால், அவர்கள் க்ருபை கூர்ந்து விஷயங்களைச் சர்ச்சித்து, அதன் நிர்ணயத்தை ஶீக்ரமாகவே வெளியிடவேண்டு மென்று ஸவிநயம் ப்ரார்த்திக்கிறோம்.

ஸிம்ஹ ப்ரியாவின் '47 ஸெப்டம்பர் மாஸத்துச் சந்தா வரவு

			ரூ.	அ.
11	ஸ்ரீ.	V. K. ராகவாசார்யர், பம்பாய் (46, 47) ...	6	0
36	,,	C. A. வெங்கடாசார்யர், நுங்கம்பாக்கம் (46) ...	3	0
91	,,	T. S. சேஷாத்ரி ஐயங்கார், தில்லஸ்தானம் (46, 47) ...	5	0
93	,,	R. லக்ஷ்மணன், மதுரை (46) ...	3	0
109	,,	K. S. ஸௌந்தரராஜய்யங்கார், நாகப்பட்டினம் (47) ...	3	0
143	,,	நம்பி ஐயங்கார், மயிலாப்பூர் (47) ...	3	0
178	,,	C. V. ஜகந்நாதாசார்யர், கும்பகோணம் (47) ...	3	0
193	,,	T. R. ராஜகோபாலையங்கார், கோயம்பத்தூர் (46, 47)	4	0
229	,,	P. S. தேசிகாசார்யர், மன்னார்குடி (46, 47) ...	6	0
276	,,	V. சக்ரவர்த்யாசார்யர், கல்யாணபுரம் (47) ...	3	0
290	,,	T. A. ராஜகோபாலய்யங்கார், ஆத்தூர், சேலம் (46, 47)	4	0
373	,,	M. வெங்கடாசலபதி ரெட்டியார், கூட்டேரிப்பட்டு (47)	3	0
380	,,	K. ராமாநுஜாசார்யர், காவனூர், பண்ருட்டி (46, 47)	5	0
402	,,	S. ரங்கம்மாள், திருவல்லிக்கேணி (46) ...	3	0
452	,,	K. கோபாலன், மானேஜர் "ஹிந்து" (46) ...	3	0
466	,,	P. ராகவாசார்யர், பல்லடம் (47) ...	3	0
506	,,	V. S. லக்ஷ்மீ நரஸிம்ஹன், கண்கொடுத்தவணிதம் (46)	3	0
547	,,	A. V. நரஸிம்ஹன், மதுராந்தகம் (47) ...	1	8
597	,,	S. K. ஸ்ரீநிவாஸாசார்யர், சோகத்தூர் (47) ...	3	0
667	,,	ராமஸ்வாமி ஐயங்கார், உறையூர் (47)	3	0
749	,,	A. ராமஸ்வாமி, அட்வொகெட், ஸெகிந்த்ராபாத் (47) ...	3	0
764	,,	V. S. ஐயங்கார், பம்பாய் (47) ...	3	0
787	,,	கடாம்பி தேசிகாசார்யர், மாதுங்கா, பம்பாய் (47) ...	3	0
788	,,	ஸுமதி ராமஸ்வாமி, ராயப்பேட்டை, சென்னை (47) ...	3	0
790	,,	V. N. கோபாலையங்கார், தென்னூர், திருச்சி (47) ...	3	0
			85	8

Regd. M. 4437.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ அஹோபில மடத்தில் அச்சிடப் பெற்ற
கீழ்க் கண்ட புஸ்தகங்கள் 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' ஆபீஸில்

விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

	சந்தாதாரர்களுக்கு ரூ. அ.	மற்றவர்கட்கு ரூ. அ.
1. ஸ்ரீ அதிகரண ஸாராவளி (தேவநாகர லிபி) [சிந்தாமணி, கல்பதரு வ்யாக்யாநத்துடன் காலிகோ பயிண்ட் செய்தது]	6—8	7—8
2. உக்தி நிஷ்டாபரணம் ந்யாஸ நிஷ்டா மீமாம்ஸா ச (க்ரந்த லிபி)	0–12	1—0
3. உக்தி நிஷ்டாபரணோத்யோதம் ,,	0—8	0–12
4. வீக்ஷாரண்ய க்ஷேத்ர மஹாத்ம்யம் மணிப்ரவாள வ்யாக்யாநம் (க்ரந்த லிபி)	... 1—0	1—8
5. ந்யாஸ நிர்ணயம் (க்ரந்த லிபி)	... 0—8	0–12
6. ஸ்ரீ வீரராகவ ஸ்வாமி ஸுப்ரபாதம் (க்ரந்த லிபி)	0—3	0—4
7. ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ஸங்க்ரஹம் (க்ரந்த லிபி)	2—0	3—0
8. ஈசாவாஸ்ய, கேந, கடோபநிஷத் (நாகர லிபி, தமிழ் மொழி பெயர்ப்புடன், 160 பக்கம்)	1—0	

(தபால் செலவு [illegible]

வேண்டுபவர்கள்:—

மானேஜர், ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்,

நெ. 22, மஹாலக்ஷ்மி தெரு, தியாகராய நகர், சென்னை.

என்னும் விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

Printed by T. A. P. Srinivasavaradachariar, at Sri Sudarsana Press, 14, Sannidhi Street, L. Conjeeveram. Q. H. Ct. 36, (Supply) Edited and Published by S. Vasudevachariar, 22, Mahalakshmi Street, Tyagarayanagar, Madras.

அந்த க்ராமங்களுக்கு அஸாதாரணமான ஒரு சோபையைக் கொடுத்து வந்தார்கள். அபர ராத்ரங்களில் அந்தக் குழந்தைகளால் செய்யப்படும் வேதாத்யயநத்தின் மநோஹர த்வநியானது ஸுமங்கலிகளான ஸ்த்ரீகளுக்கு மங்கள ஸூத்ரம் போல், அந்த க்ராமங்களுக்கு, ஒரு அலங்கார விசேஷத்தைச் செய்து வந்தது. அவை யெல்லாம் லுப்தமாகி விட்டனவே.

> “ கஸ்த்வாவஸஸத்ரூடஹம் ஹ்ராஷ்யாமி ஹ்ருதயம் மம ।
> ஸுயீயா நஸ்யேயம்ஸமு ” ॥

என்று சோகிக்கும்படி யன்றோ ஏற்பட்டு விட்டது? முற்காலத்தில் ராக்ஷஸர்கள் வஸிக்கு மிடத்திற் கூட வேத பாடசாலைகள் நடந்தன வென்று நாம் இதிஹாஸங்களி லிருந்து அறிகிறோம். ராக்ஷஸர்களின் நகராதிகளுக்கும் நிஹீநமாகவே நமது புண்ய பூமி பரிணமித்து விட்டதே!

வேதத்தின் வைபவத்தை நாம் என் சொல்வோம்? மநு ஸ்ம்ருதியில்,

> “ ந தேந வ்ருத்தோ பவதி யேநாஸ்ய பலிதம் ஶிர: ।
> யோ வை யுவாப்யதீயாநஸ்தம் தேவா: ஸ்தவிரம் விது: ॥ ”

[சிரோருஹங்கள் நரைத்தால் ஒருவன் வ்ருத்தனாக மாட்டான். வேதாத்யயநம் செய்து அதில் தேர்ச்சி பெற்றவனே வ்ருத்தன் என்னும் பட்டத்துக்கு அர்ஹன்] என்று வேதாத்யயநம் செய்தவன் மஹிமை கூறப்பட்டிருக்கிறது. பகவானுக்கு வாஹநமான கருடனுக்கு வேதத்தின் அவயவங்கள் அங்கங்களாக இருக்கின்றன வென்று தைத்திரீய ஸம்ஹிதையே

“ ஸுபர்ணோஸி கருத்மாம்ஸ்த்ரிவ்ருத்தே ஶிரோ காயத்ரம் சக்ஷு:...........”

...தி வாக்யத்தால் உத்கோஷிக்கின்றது. புராணாதிகளிலும் இதன் மஹிமை புகழப்பட்டிருப்பதை எல்லாரும் பார்க்கலாம். இவ்வாறு வேத வைபவத்தைப் புகழ்ந்து பேசுபவர்கள் ஸ்வார்த்த மென்பதையே அறியார்; அவர்கள் மஹா யோகிகள்; பகவதாஜ்ஞையின் பேரில் இவ்விடத்தில் அவதரித்தவர்கள். அவர்களால் கொடுக்கப்பட்டுள்ள விலையுயர்ந்த இந்தத் தநத்தை நாம் இழந்து விடுகிறோம்! இது புத்திமத் க்ருத்யமாகுமா ம்லேச்சர்கள் கூட தமது வேதமாகிய ‘ கொரான் ’ என்பதைப் பாலர்களுக்கு முதல் படிப்பாக வாசோ விதேயமாகச் செய்து வைக்கிறார்களென்று நாம் கேட்டிருக்கிறோம். அவர்களுடைய கலாசாலைகள் எல்லாவற்றிலும் இந்தக் கோரானுடைய பாடத்தைக் கட்டாயப் பாடமாக வைத்திருக்கிறார்களாம். அதிகாரிகளுக்குத் தக்கவாறு நாமும் அம்மாதிரி ஏன் செய்யக்கூடாது? ஆனால் குருட்டுத்தனமாக ஒன்றை உருப் போடுவதால் என்ன பயன் உண்டாகுமென்று கேட்கலாம். இது விஷயமாக சர்ச்சை ஒன்று பஹு காலமாக உண்டு. “அர்த்த ஜ்ஞாநத்துடன் வேதத்தை அத்யயநம் செய்தால் மாத்ரம் அது ஃபலவத் தாகுமா? இல்லாவிட்டால் அர்த்த ஜ்ஞாநமின்றிக்கே கேவலம் அக்ஷராசி க்ரஹணத்துக்கும் ஃபலமுண்டா?” என்பது தான் அந்த விசாரம்.

Regd. M. No. 4437.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

கீழே குறிப்பிட்டுள்ள புஸ்தகங்கள் விற்பனைக்கு (விலை சரஸமாய்க்) கிடைக்கும்.

[Second hand books for Sale at the cheapest rate]

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
25 JAN 1941
MADRAS

ரூ. அ.

1. **ஸ்ரீ மஹா பாரதம்** [ஸவ்யாக்யாநம்; தெலுங்கு அக்ஷரம்] 3 ஸர்புடங்கள்
   முதல் ஸர்புடத்தில்:— ஆதி, ஸபா, ஆரண்ய, விராட, உத்யோக பர்வங்கள்
   இரண்டாம் ஸர்புடத்தில்:— பீஷ்ம, த்ரோண, கர்ண, ஶல்ய, ஸௌப்திக, ஸ்த்ரீ பர்வங்கள்
   மூன்றும் ஸர்புடத்தில்:— ஶாந்தி, அநுஶாஸந, அச்வமேத, ஆச்ரமவாஸ, மௌஸல, மஹாப்ரஸ்தாந, ஸ்வர்க்காரோஹண பர்வங்கள் ... 40—0
2. **ஸ்ரீமத்பாகவதம்** [ஸ்ரீதரீய வ்யாக்யாநம்; தெலுங்கு அக்ஷரம்] 2 ஸர்புடங்கள்
   முதல் ஸர்புடத்தில்:—1 முதல் 9 ஸ்கந்தங்கள் வரை
   இரண்டாம் ஸர்புடத்தில்:—10, 11, 12 ஸ்கந்தங்கள் ... 20—0
3. **ஹரிவம்சம்** [தெலுங்கு அக்ஷரம்] ... 6—0
4. **உத்தர ஸ்ரீ ராமாயணம்** [தெலுங்கு அக்ஷரம்; ஸ்ரீ கோவிந்த ராஜீய வ்யாக்யாந ஸஹிதம்] ...
5. **திநகரீ, முக்தாவலீ, காரிகாவலி, ராம ருத்ர பீட்டி.** [நாகராக்ஷரம்] ... 5—0
6. **லீலாவதி** [ஸவ்யாக்யாநம்; நாகராக்ஷரம்] ... 5—0
7. **நிக்ஷேபரக்ஷை, நிக்ஷேப சிந்தாமணி, வேதாந்த கௌஸ்துபம்** [க்ரந்தாக்ஷரம்] ... 5—0
8. **பாலமநோரமா** [க்ரந்தாக்ஷரம்] 3—0
9. **ஸ்ரீ ஸந்நிதி திருவாராதநச் சுருக்கம்** ... 0—4

இப்புத்தகங்கள் பழையனவாயினும் நல்ல நிலையில் உள்ளன. இவைகளை வாங்குவோர்க்கு நூற்றுக்கு 20 வீதம் கமிஷன் கழித்துக் கொடுக்கப்படும். தபால் சார்ஜ் வேறு. இவைகளை அபேக்ஷிப்பவர்:—

K. ஸுதர்சநாசார்யர்,
3, புஜங்கராவ் தெரு, சைதாப்பேட்டை, (**மதராஸ்-15**)

என்ற விலாஸத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

Printed by T. A. P. Srinivasavaradachariar,
at Sri Sudarsana Press, 14, Sannidhi Street, Little Conjeeveram.
Edited & Published by S. Vasudevachariar, 5, Ramaswami St., Tyagarayanagar, Madras.